விலை ஒரு அணா. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

# உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி 1. ] சென்னை, சனிக்கிழமை (13-11-1948) [ குண்டு 6

## ஆட்டுவிக்கும் மேலிடமும் ஆடித்திணறும் கீழிடமும்

வடநாடு - தென்னாடு - இது திராவிடக்கழகத்தொடர் மொழி மேலிடம் கீழிடம் - இது காங்கிரஸ் கழக "ஸ்லோகம்" மேலிடம் கீழிடம் என்பது பலபொருள் பொதிந்த புதுக்குறள். அதாவது முறையே அகில இந்திய தலைமைக் காங்கிரஸ் கமிட்டியையும் மாகாண காங்கிரஸ் கமிட்டியையும் குறிக்கும், மத்திய சர்க்காரையும் மாகாண சர்க்காரையும் குறிக்கும், முன்னது ஆட்டுவிப்பது. பின்னது ஆடவேண்டியது. இது ஜனநாயகத் தத்துவத்திற்கு மாகாணத் தனியாட்சியுரிமைக்கும் பொருத்தமாக இல்லையே என்று சில சந்தேகப் பேர்வழிகள் கேட்கலாம். இதற்குப்பதில் கிடைப்பதும் சந்தேகம்தான்.


இந்த மேலிடம் கீழிடம், முதலில் சுவர்க்க லோகமும் பூலோகமும் என்ற நிலைமையிலிருந்து படிப்படியாக, ஆண்டவனும் அடியாரும் குருவும் சீடறும் எஜமானனும் ஊழியனும் தகப்பனும் மகனும் அண்ணனும் தம்பியும் நிலைமையையின்றி. இப்போது நீயும் நானும் எந்த தன்னுணர்வு தன்மான தாயபாகஸ்தர் நிலைமையை அடைந்துவிட்டிருக்கிறது. இவ்விதம் மேலிடத்தின் "மாத்து" குறைய கீழிடத்தின், "பக்தி" குறைய காரணம் எண்ணி சந்தேகமே இல்லை. இந்திய சுதந்தரக் கிளர்ச்சி எதனால் ஏற்பட்டதோ, அதே காரணம்தான் இதற்கும். உலகப் போர், சச்சரவு மனஸ்தாபம். அடிதடி ஏன் ஏற்படுகிறது? சுயநலமும் சுரண்டலும் ஆதிக்கப் பேராசையும் தான் இவற்றிற்குக் காரணமென்று உலகப்போர் வரலாறே, கலங்கரை விளக்கம்போல் சாட்சி கூறி நிற்கிறது.

நம்நாடு அந்நியரான ஆங்கிலேயர்களின் ஆதிக்க ஆட்சிப்பிடிப்பிலிருந்து விடுப்பட்டு, நாம்- நம் நாட்டினர் சுயாட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த ஓராண்டுக் காலமாகத் தான், இந்த வடநாடு தென்னாடு உணர்ச்சியும் மேலிடம் கீழிடப் பான்மையும் நாளுக்குநாள் புது ஓட்டம் கண்ட புது ஊத்துப்போல் அதிகரித்த வண்ணமிருக்கிறது

இந்த உணர்ச்சி அதிகரிக்கத் திராவிட கழகத்தார் கூறும் காரணங்கள் யாவை? வடக்கத்தியாரும் தெற்கத்தியாரும் இனத்திலே பண்பிலே, போக்கிலே, வெவ்வேறினர் வடக்கத்தியார், ஆரிய இனம் தெற்கத்தியார் திராவிட இனம். இந்தியா இப்போது ஒன்றுபட்டிருந்தாலும், ஆதிக்கம் பெரும்பாலும் வடக்கத்தியார் கையிலும், அவர்களைச் சேர்ந்தவர்களென்பவர்களின் கையிலும்தானிருக்கின்றன. தெற்கத்தியார் 'எந்தராசா வந்தாலும் எந்தராசா போனாலும் தோட்டிக்குப்புல் சிரைக்கும்வேலைதானே, என்ற பழமொழிப்படி, இப்போதும், ஆங்கில ஆட்சியிலிருந்து தாசானு தாச நிலைமையில் தானிருக்கின்றனர். வடக்கத்தியாரின் ஆதிக்கம் வலுத்தத்தினால்வடக்கத்தியார் பொருளாதாரத் துறையில் தெற்கத்தியாரை சுரண்டுவதும் அதிகாரத்திலிருக்கிறது. வர்த்தகம்பெரும்பாலும் வடக்கத்தியாரின் கைக்கு மாறிவிட்டது. தெற்கத்தி சில்லரை வியாபாரிகள். வடக்கத்தியார் ஆட்டும் வகையில் ஆடவேண்டியவர்களாகிவிட்டனர். எனவே, இந்த நிலைமை ஒழியவேண்டும். ஆட்சித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் தென்னாட்டினர் தன்னாட்சி உரிமை பெற்றாகவேண்டும். இன்றேல் தென்னாட்டினர் என்றென்றும் தலைதூக்க முடியாது." என்பதாகும். இவர்களுடைய வாதம் நியாயமா? நேர்மையா? என்பது ஒருபுரமிருக்கட்டும்.

மேலிடம் கிழிடத்தின் உறவு நிலைமை எப்படியிருக்கிறது என்று கவனிப்போம். இந்த மேலிடம் கீழிடம் தகாராறு ஏற்பட்டது பிரகாசம் மந்திரிசபை ஏற்பட்ட காலத்தில்தான்? பிரகாசம் முதலமைச்சராவதை மேலிடம் விரும்பவில்லை. நம் ஆச்சாரியார் கோஷ்டிக்கும் இதில் விருப்பமில்லை. ஆனால் காமராஜ் கோஷ்டியோ, ஆச்சாரியார் கோஷ்டிக்கு எதிர் முகாம் அமைத்தது. ஒரு தமிழ் நாட்டினர் அதிலும் தமிழர் முதலமைச்சராவதை ஆச்சாரியார் கோஷ்டி விரும்பவில்லை. என்று வெட்ட வெளிச்சமாகப் பேசப்பட்டது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது நாமறியோம். தமிழ்நாட்டுக் கோஷ்டியோ, ஆச்சாரியார் கோஷ்டிக்கு இடமளிக்க விரும்பவில்லை. எனவேதான், தமிழரும் வேண்டாம், தமிழ்நாட்டு பிராமணரும் வேண்டாம் என்று தீர்மானித்து மேலிடத்தின் பேச்சையும் தட்டி திரு பிரகாசம் காருவை முதலமைச்சராக்கியதாகக் கூறப்படுகிறது. ஆனால் பிரகாசம் காருவோ, பழம்புலி. தமிழர்களின் இஷ்டப்படி - அல்லது அவர்கள் மனப்போக்கின்படி நடக்கவில்லை. ஏன்? பழைய ஆட்சி அனுபவத்தின் பண்பினால் ஆகவோ- நாடார் கோஷ்டிக்கும் ஆச்சாரியார் கோஷ்டிக்கும் கண்ணெரிச்சல் ஏற்பட்டது பிரகாசம் காருவை வெளிக்கடத்த ஏற்பாடாயிற்று. மீண்டும் மேலிடத்துக்குக் காவடியும் அங்கிருந்த கட்டளையும் வந்தது. இருவரும் ஒத்துப்போயோ ஒத்துப் போகாமலோ ஓமந்தூராரை வலிய முதலமைச்சராக்கினர்.

ஓமந்தூராரோ தன்மானத்துடன் தன்னாட்டு நலப்பற்றுடன், நேர்மை




உபதேசத்திர்க்குக் குறைச்சலில்லை, ஆனால்......?

வழியிலே நடக்கலானார். மேலிடத்திலிருந்து வரும் கட்டளைகள் பலவற்றை, மாகாண நடப்பு நிலைமையுணர்ந்து ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். மாகாண உரிமைகளுக்காக வலிந்தும் துணிந்தும், மேலிடத்தில் முறையிடலானார். மேலிடம் அனாவசியமாகத் தலையிடுவதையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

இவ்வித தலையீடுகளில் முக்கியமானவை, மதுவிலக்கு, ஜமீன்தாரி இனாம்தாரி ஒழிப்பு, இந்தி மொழி நுழைவு ஆகியவைகளாகும். ஓமந்தூரார் மந்திரிசபை, இந்தியாவில் முதல் முதலில் மாகாணமெங்கும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவரும் பெருமையை முந்துற்றது. ஆனால் மேலிடமோ, இப்போது பணவசதியில்லை. எந்தத் திட்டத்தை நிறுத்திவை என்று கட்டளையிட்டது இதைவிட மிக மிக தொல்லைகளாகச் செய்தது ஜமீன்தாரி இனாம்தாரி ஒழிப்பு ஏற்பாடுதான் தென்னாட்டுத் தலைவர்களெனப் படுபவர்களின் தலையீட்டால், இந்த மசோதாக்கள் எவ்வளவோ தொல்லைக்குள்ளாயின மந்திரி சபைக்கு ஆபத்து நேரிடும் கட்டத்தையும் அடைந்தது. ஆனால் காங்கிரஸ் கட்சியின் பிடிவாதத்தால் இம் மசோதாக்கள் நிறைவேறின. இதைக்கண்டு மேலிடம் தூங்கவில்லை. இப்போது உங்களுக்குத்தர பணமில்லை. இந்த மசோதாக்களை அமுல் நடத்துவது நிறுத்தி வைக்கவு” மென்று உத்தரவுக்கு மேலுத்தரவுகள் பறந்துவந்தன. ஆனால் சென்னை மந்திரிசபையோ எங்களுக்கு உங்கள்பணம் தேவையில்லை நாங்களே சமாளித்துக் கொள்வோமென்று கூறிவிட்டன. அப்படியிருந்தும் ஜமீன் நஷ்ட ஈடுதருவது பற்றி சட்டத்தடை வியாக்யானங்கள் எல்லாம் கிளப்பப்படுகின்றன. மேல் வட்டகையில் மேலிடத்தின் மதிப்பைப் பெறத்தானே இந்தி நுழைவும்! இவ்வித தலையீட்டைக் கண்டு சாதுவான சென்னை கீழ்சபை சபாநாயகருக்கும், ரோஷம் பொத்துக் கொண்டுவந்து

“மேலிடம் கீழிடமெல்லாம் இங்கே சட்டசபையில் செல்லுபடியாகாது. அது காங்கிரஸ் கட்சியை மாத்திரம் பொறுத்த விஷயம். அந்த மேலிடத்திற்கும் சட்டசபையின் மீது அதிகாரம் கிடையாது அது வெறும் ஆலோசனைகூறும் சபையேயன்றி கட்டளை பிறப்பிக்க அதற்கு உரிமை கிடையா” தென்று

தீர்ப்புக் கூறவேண்டியதாகிவிட்டதென்றால் இந்த மேலிடம் கீழிடம் தகராறு எவ்வளவு தூரம் வலுத்திருக்கவேண்டும் மாகாணத்தின் முன்னேற்றத்திற்கு அந்த மேலிடம் ஏன் தடைசெய்ய வேண்டும்; இந்தியா முழுவதின் பொதுநலத்திற்கா? அல்லது, தன் ஆதிக்கத்தைக் காட்டவேண்டும் என்ற சுயநலத்தாலா? அல்லது தென்னாடு தகப்பன்சாமியாக நடந்துகொள்ள வழிவிட்டு, மற்ற மாகாணங்களுக்கு தலையிறக்கம் ஏற்படும்படி விடலாகாதென்பதனாலா?

உணவு வசதி விஷயத்திலும், நாம் மேலாதிக்கத்திற்கு, இவ்வளவு தூரம் தலைவணங்காதிருந்தால், நாம் இவ்வளவு தூரம் கஷ்டப்பட நேர்ந்திருக்காதென்று சென்னை அரசியல் வட்டாரத்திலும் பேச்சுக்கள் ஒலித்ததும் மறுக்க முடியுமா?

மந்திரி சபையின் தலைமை ‘தினக்கண்டம் தீர்க்காயுசெ’ன்றிருப்பதன் காரணமென்ன? மேலாதிக்கமும், கட்சியாதிக்கமும்தான் என்பதை யாராவது மறுக்க முடியுமா? நம் மாகாணத்திற்குத் தேவையான ஒவ்வொன்றுக்கும், நம் சர்க்கார் நடவடிக்கை ஒவ்வொன்றுக்கும், மேலிடத்திற்கு யாத்திரை சென்று சம்மதி வரம் பெற்று வரவேண்டிய நிலைமை, இன்னும் எத்தனை காலத்திற்கு நீடித்திருக்கும்? அப்படி காவடி தூக்கிப்போனாலும் நல்லவரமாவது கிடைக்கிறதா? இல்லையே! ‘தடையும் ஒத்திவைப்பும்” என்ற வரப்பிரசாதம்தானே கிடைக்கிறது!

நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியத்திற்கும், தடையும் தவக்கமும் ஏற்பட்டால், நம் மாகாணம் முன்னேறுவதெப்படி? எக்காலத்தில்? பஞ்சத்தால் பரிதவிக்கும் இந்த நிலைமையில், விரைந்து பரிகாரம் தேடுவதை விட்டுவிட்டு, வேளையும், தருணமும், வசதியும் பார்த்துக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமா? எனநேர்மையாளரே ஆராய்ந்து பார்த்துத் தீர்ப்புக் கூறட்டும்.

எனவே, திராவிடக் கழகத்தினர் “நாடு பிரிந்தாகவேண்டும். நம் நாட்டைநாமே ஆண்டுகொள்வோம் நம் பொருளாதார வளங்களை நாமே பாதுகாத்துக்கொள்வோம். என்று கூறுவதில், வாதமிடுவதில், பிரசாரம் செய்வதில் என்ன தவறு இருக்கிறது? என்றுதானே நியாயவுலகம் கேட்கும்.

அரசியல் நிர்ணய சபையில், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரே, ‘தென்னாட்டிலே, பிரிவினைக் கிளர்ச்சி வலுத்துவருகிறது, அந்தக்கிளர்ச்சி வலுப்பட இடமளிக்கவேண்டாம்’ என்று எச்சரிக்கை செய்ய நேர்ந்துவிட்டதென்றால், இந்தப் பிரிவினைக் கிளர்ச்சி திராவிடக் கழகத்தினரிடம் மாத்திரமேயன்றி, தென்னாட்டார் எல்லாருள்ளத்திலும், பொங்கிக் கொண்டிருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிறதல்லவா! இவ்விதம் உணர்ச்சி பெருகக் காரணம், மேலிடத்தார் அடிக்கடி தலையிடுவதுதானென்பதைக் கூறவும் வேண்டுமா? எனவே, ஆட்டுவிக்கும் மேலிடம், ஆடும் கீழிடமென்ற இந்தப் பிரச்சினையை, அரசியல் நிர்ணய சபையார் முதன்மையாகக் கவனித்து, முடிவு கட்டவேண்டியது மிக, மிக அவசியமும், அவசரமுமென்று தெரிவித்துக்கொள்கிறோம். ‘சீனாவின் நிலைமையை இந்தியாவுமடையலாகாது. சச்சரவுகள் விடுத்து, ஒற்றுமைப்படுங்கள்” என்று ஆட்சி முகாமிகள் வாயுபதேசம் செய்துவிட்டு, இவ்விதம் ‘மேலிடத்துத் தலையீடுகள்’ நடத்துவதுமுன்னுக்குப்பின்முரணானசெய்கையும், நாட்டின் அமைதியையும், நலனையும், சுபீட்சத்தையும், ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் குலைக்க வழிசெய்வதாகுமென்பதையும், ஆட்சித் தலைவர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறோம். எனவே, இனிமேலாயினும், மாகாண உரிமைகள் மதிக்கப்பட தாமதமின்றி வழிசெய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## வாழ்க! பீரங்கி

(அ. புகழரசு திருப்புவனம்)

——: (o) :——

சிந்தனையைத் தூண்டிடும் செந்தமிழ்க்கட்டுரைகள்
சீர்பட மிளிர்ந்து நேர்பட நின்று
காண்பவர் போற்றும் மாண்புறு வகையில்
தெளிவுறு கருத்துக்கள் ஒளிர்வுடன் நிரம்பி
தாழ்வுறுத் திருநாட்டில் வாழ்கின்றமக்கள் தம்
மடமைதனை அகற்றலே கடமையாய்க் கொண்டு
ஏழைபணக்காரன் கோழையென்றிடும்
இழிநிலை தன்னை ஒழித்திடத் தோன்றி
சாதி மதந்தவிர்த்து நீதிக்குப் பொருந்தும்
ஏற்றத்தாழ் வில்லாத போற்றுதற் குறிய
நல்லதொரு சமுதாயம் நாட்டில் நிறுவிட
**இரங்கநாதச்** சிலரின் பரந்த சிந்தனையில்
சிறப்புடன் தோன்றி திறன்பலபெற்று
மங்காப்புகழுடன் எங்கும் தவழ்ந்திடும்
**உடுமலை பீரங்கி** யெனும் நடுநிலை காட்டும்
அமிழ்தம் சொட்டிடும் தமிழ்ப்பெரு மாசிகை
மாசிலாப் புலவர்தம் ஆசிகளேற்று
வாழ்க! பல்லூழி வான் மதிபோல்!!!

——: (x) :——

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி

### சந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 1—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 2—8—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்
33 திருவேங்கிட முதலித் தெரு
பெரியமெட்டு. சென்னை, 3.

## காப்பியமிர்தம்

ரேஷன் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வந்ததும்காபிக் கிளப்புகள் எல்லாம் பட்டுப்போகும் என்று பலர் கனவுகண்டனர். ஆனால் அந்தக்கனவு வெறும் பகற்கனவாகி, இப்போது காப்பிக் கிளப்புகளுக்கு ஏகப்பட்ட கிராக்கியும், ஆதரவாளர்களும் ஏற்பட்டிருக்கின்றனர். “கண்கொண்டு பார்க்குமிடந்தோறும் தோன்றும் கருவைப்பிரானே” என்று பாடிப் பரவசமுற்றார் மணிவாசகர். இப்போதோ, “கண்கொண்டுபார்க்குமிடந்தோறும் காப்பிக் கிளப்புகளே” என்று பாடிப் பரவசமடைகிறார்கள், அரைவயிற்று ரேஷன் தாசர்கள். எந்த காப்பிக் கிளப்பில் பார்த்தாலும் ரயில்வண்டியில் யாத்திரைக் கூட்டம் போல் தான்காணப்படுகிறது காப்பிகிளப்புகளுக்குக்கொள்ளை ஆதரவு. இந்த அதிர்ஷ்டத்தை இன்னும் பெருக்கடையச் செய்ய சிலமேனாட்டு வைத்தியர்கள் புதிய, இரகசியம் ஒன்று கண்டுபிடித்திருக்கின்றனர். இதுவரை நமக்குக் கூறப்பட்டு வந்தது, காப்பி ஒருவகை விஷபானம். அதிலுள்ள காப்பைன் என்ற விஷம் நரம்புகளின் உணர்ச்சியைப் பாதித்து நரம்பு பலவீன நோய்களையும் இருதய நோய்களையும் உண்டுபண்ணுகிறதுடன் குழந்தைகளின் வளர்ச்சியையும் பாதிக்கிறது, மாட்டுத் தன்மையையும் கூட்டுவிக்கிறது என்று.

ஆனால் இந்தக் கூற்றை பொய்ப்படுத்த முன்வந்திருக்கிறார்கள், எமரி யுனிவர்சிட்டி மருத்துவப் பேராசிரியர்களான டாக்டர்கள் ஜார்ஜ் பாச்மான், ஜான் ஹால்டி, வின் பிரேவைன், சார்லஸ் என்பவர்கள். எலிகளைக் கொண்டு சோதனை நடத்தி இந்த உண்மையைக் கண்டுபிடித்தார்களாம், காப்பைன் விஷம் கலந்த தண்ணீரை, சில எலிகளுக்கும், வெறும் குழாய்த்தண்ணீரை சில எலிகளுக்கும் கொடுத்து, சிலநாட்கள் சோதனை செய்து வந்தனர். காப்பைன் கலந்த தண்ணீரைக் குடித்த எலிகள், மற்ற எலிகளைப் போன்றே உடல் வளம் பெற்றிருந்தனவாம். இந்த எலிகளுக்குத் தினம் கொடுத்த காப்பெயினின் அளவு அதிக காட்டான 34 கோப்பை காப்பியிலோ-தேநீரிலோ எவ்வளவு காப்பைன் இருக்குமோ அவ்வளவிருக்குமாம். இதை உண்ணும் எலிகளின் நரம்பு பாதிக்கப்படவில்லையாம். ஜனனேந்திர சக்தியும் குறையவில்லையாம். உடல் வளமும் குறையவில்லையாம்.

# நடிகர்களும் அங்கங்களும்

——: (o) :——

"எனக்கு நல்ல உடற் கட்டிருக்கிறது" "நான் நன்றாகப் பாடுவேன்" என்று சொல்லிக் கொண்டு பலர் சினிமாவில் நடிக்க ஆசைப்படுகின்றனர். வெறும் உடலழகும் குரலினிமையும் மாத்திரம் இருந்தால், சினிமாவில் வெற்றி பெற்று விடமுடியாது. அலங்கரித்துக் கொண்டு, மரக்கட்டைபோல் நடிப்பதும், கிராமபோன்போல் பாடுவதும், வெற்றி தந்து விட முடியாது. சினிமா என்றால் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கமும் நடித்தாக வேண்டும். வெறும் வாய் சப்தத்தினால் துக்கத்தையோ சந்தோஷத்தையோ, மற்றும் வேறு விதமான மனக்கிளர்ச்சிகளையோ, காட்டுவது உயிரற்ற உடல்போலத்தான் இருக்கும்.

ஹாலிவுட்டில், இத்துறையில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. நடிகர் நடிப்பது என்றால், அவனுடைய ஒவ்வொரு அங்கமும், சமய சந்தர்ப்ப உணர்ச்சி பாவங்களை வெளிக்காட்டவேண்டும்.

சிலரிடம் சில விசேஷ அபிநய சக்திகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு அங்கமோ, சில அங்கங்களோ விசித்திர அபிநய சக்தி கொண்டிருக்கலாம். இந்த சக்தியை ஹாலிவுட் பிரம்மாக்கள் சாத்தியமான அளவு பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். விசேஷ சக்தி கொண்டவர்களுக்கு தனிப்பட்ட ஆதரவு தரப்படுகிறது. கையிலோ, காலிலோ, புருவத்திலோ, உதடுகளிலோ மற்ற அங்கங்களிலோ, விசித்திர அபிநய சக்தி கொண்டவர்களில் தகுதியானவர்களுக்கு இங்கு உரிய மதிப்பு கிடைக்கிறது. அந்தந்த விசேஷ சக்திகளை உலகம் கண்டு மகிழ்ச்சியும், ஆச்சரியமும் அடையச்செய்ய அதிகபாடு படுகிறார்கள். நல்ல சம்பளமும் தரப்படுகிறது. இதனால் விசேஷ சக்தி கொண்ட அங்கங்களை, இன்சூர் செய்து கொள்ளுகிறார்கள். சில நடிகர்களின் கண், புருவம், கை, கால், உதடு, வாய், கூந்தல், மீசை, குரல், முதலியவைகள், ஆயிரக்கணக்கான பவுன்களுக்கு இன்சூர் செய்யப் படுகிறது.

ஹாலிவுட் நடிகர்களில் ஒருவரான ரெய்மாண்ட் வால்பர்ன் என்பவர், இதுபோன்ற ஒரு விசேஷ சக்தியால் மதிப்படைந்தவர். இவருடைய புருவங்களே இவருக்கு செல்வத்தைக் காட்டுவிக்கின்றன. புருவங்களின் அசைப்பிலேயே, மனோநிலைமையைக் காட்டுவார். வாய்பேசாமலே, உள்ளக்கருத்தை புருவங்களே எடுத்துக் காட்டி விடும். இவருடைய சினிமா வெற்றியே, இந்தப் "பேசும் புருவங்களை" நம்பியிருக்கிறது. பெருமையும் செல்வமும் கூட்டுவிப்பன புருவங்களே.

இத்தகைய புருவங்களுக்கு விபத்து நேரிட்டுவிட்டால் - அதாவது அசைக்க முடியாமல் போய் விட்டால், அந்த நடிகரின் கதி என்ன ஆகும்? அவருடைய மனோநிலைமை எப்படியிருக்கும்? ஒரு நாள் இம்மாதிரி விபத்தும் நேரிட்டு விட்டது, ஆனால் உண்மையில் அல்ல. முடிவில் அது ஒரு தமாஷாநாடகமாக முடிந்தது. யுனிவர்செல்கம்பெனியாரின் "காதலன் திரும்பி வந்தான்" என்ற படத்தில் வால்பர்ன் முக்கிய நடிகர். இந்தப் படத்தில் அவர் தமது புருவங்களின் விசேஷ அபிநய சக்தியை காட்ட வேண்டியிருந்தது.

அன்று படம் எடுக்க எல்லா ஏற்பாடுகளும் தயாராக இருந்தன. வால்பர்ன் மேக்கப் அறையில் நுழைந்தார். "மேக்கப்" நிபுணரும் தன் வேலையை ஒழுங்காகச் செய்து முடித்தார். டைரக்டர் வில்லியம் சீட்டர் வந்ததும் முதலில் வழக்கப்படி ஒத்திகைக்கு ஏற்பாடு செய்தார். வால்பர்னின் சாதாரண நடிப்புகள் எல்லாம் திருப்திகரமாக நடந்தன. ஆனால் புருவங்களின் அபிநய விசேஷத்தைக் காட்டவேண்டிய கட்டம் வந்ததும் பேரிடி விழுந்தது போலாயிற்று. சர்க்கஸ் வித்தைக்காரனைப்போல். பெருமிதத்துடன், தன் விசேஷத் தலையைக் காட்டத் தொடங்கினார். தொடங்க ஆரம்பித்த அடுத்த நொடியிலேயோ "ஐயையோ, "பச்சவாதம்! பச்சவாதம்" எனக்குப் பச்சவாதம் வந்து விட்டது, கூப்பிடுங்கள் டாக்டரை" என்று அலறினார். அவருடைய முகம், பாம்புகடித்தவன் முகம்போல் பயங்கரமாகத் தோற்ற மளித்தன் காரணம் புருவங்கள் அசையவில்லை. மரக்கட்டைபோல் உணர்ச்சியற்று மரத்துப் போயிருந்தன. வால்பர்ன் எவ்வளவோ முயற்சித்தார். ஜபம் சாயவில்லை புருவங்கள் கொஞ்சமும், அசைந்து கொடுக்கவில்லை. வால்பர்னின் தோற்றம் நொடிக்கு நொடி பயங்கரமாகிவந்தது. அவருடைய சினிமா வாழ்க்கையே அந்தப் புருவங்களை நம்பித்தானே இருக்கிறது? இடிவிழுந்தது தன் வாழ்வில் என்ற நிலைமை ஏற்பட்டால் அவர் மனோ நிலைமை எப்படியிருக்கும்? டைரக்டருக்கும் கவலையும் திகிலும் ஏற்பட்டு விட்டது.

வால்பர்னின் புருவங்களை சோதனை செய்தார். அவருக்கும் அவைகள் மசியவில்லை. பக்கத்திலிருந்தவர்களை கவலையுடன் பார்த்தார். பால் பிரண்ட் என்ற இருவரைத் தவிர மற்றவர்கள் முகங்களில் கவலையும் திகிலும் குடிகொண்டிருந்தன. அவ்விருவர் மாத்திரம், மறைந்தபடி இருந்து, சிரிப்பை அடக்கமுடியாது சிரித்துக் கொண்டிருந்தனர்.

டைரக்டர் தமது விசாரணையைத் தொடங்கினார். பயமும் நயமும் கலந்த அந்த விசாரணையின் முடிவில், "மேக்அப்" நிபுணர் உண்மையைக் கூறவந்தார்.

பால் - பிரண்ட் என்ற இருவரும் தமாஷா பேர்வழிகள். அதனால் வால்பர்னிடமும் தங்கள் வாலைக் காட்ட முற்பட்டனர். 'மேக்கப்' நிபுணரையும் வசப்படுத்திக் கொண்டனர். தாங்கள் செய்யவிருக்கும் தமாஷா சதி நாடகத்திற்கு "மேக்அப்" நிபுணரை முக்கிய வில்லனாக்கிக் கொண்டனர். வால்பர்ன், மேக்அப்புக்காக வந்ததும் மேக்அப் நிபுணர் தமது தந்திரத்தைக் கையாண்டார். மேக்அப் செய்வதில், பசைமாவுகள் தடவப்படுவது அனைவரும் அறிந்ததே இவ்வித பசைமாவுகள் தடவப் படுவதன் முன் மேக்அப் நிபுணர், மெல்லிய நாடாக்களை வால்பர்னின் புருவங்களின்மீது ஒட்டி, அவற்றின் மீது வழக்கப்படி பசைமாவுகளையும் வர்ணங்களையும் தடவி விட்டு விட்டார். பசை காய்ந்ததும் நாடாத்துண்டுகள், புருவங்கள் அசைக்க முடியாதபடி பிடித்துக்கொண்டன.

இதைக்கேட்டதும் அங்கிருந்தவர்கள் எல்லாம் கவலை நீங்கி "இடிபிடி" யென சிரித்தனர். பின்னர் நாடாத்துண்டுகளும் அகற்றப்பட்டன. வால்பர்னின் கவலையும் அகன்றது.

இந்த சம்பவம் வெறும் வேடிக்கைக்காக நிகழ்த்தப்பட்டது என்றாலும், இதிலிருந்து ஒரு உண்மை வெளியாகிறது. அதாவது, தனிப்பட்ட உறுப்புகளின் விசேஷ அபிநய சக்திகளுக்கு ஹாலிவுட்டில் எவ்வளவு மதிப்புத் தரப்படுகிறது என்று தெளிவாகிறது.

ஆனால் நம் நாட்டிலோ, இத்துறையில் அதிக கவனம் செலுத்துவதாகக் காணோம். நகைச்சுவை அரசு திரு. என். எஸ். கிருஷ்ணனிடம் இத்தகையை விசேஷ சக்தியிருக்கிறது. ஆயினும் அவருடைய பொது நடிப்புக்கே அதிக மதிப்புத் தரப் படுகிறது. இன்னும் சிலரோ, இத்தகைய விசேஷ சக்தியை வெறும் குரங்கு சேஷ்டைகளில் பயன் படுத்துகிறார்கள்,

காதல் கட்டங்களிலே, பயங்கர நிகழ்ச்சிக் கட்டங்களிலே, "கண்கள் பாஷை" தான் அதிகம் தேவைப்படுகிறது. மகிழ்ச்சி, சோகம், பயம், வெறுப்பு, வீரம், முதலிய உள்ளக் கிளர்ச்சிகளைக் கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுவது கண்களின் பாவமேயாகும். இக்கட்டங்களில் வாய்ப்பேச்சினால் அவ்வளவு பலன் ஏற்படாது. வாய்ப்பேச்சைவிட ஆயிரம் பங்கு அதிகபலன் அளிக்கும் "கண் பேச்சு". இன்னும் தெளிவுறச் சொன்னால் இக் கட்டங்ளில் நூற்றுக்குத் தொண்ணூறுபங்கு "கண் பேச்சு" தான் தேவை. வாய்ப் பேச்சினால் பல நிமிஷங்கள் வெளியிடும் விஷயங்களை எல்லாம் கண் ஒரே நொடியில் வெளிப்படுத்தி விடும்.

கண்ணொடு கண்ணிமை
நோக்கொக்கின் - வாய் சொற்கள்
என்னும் பயனுமில

என்று திருக்குறளில் கூறப்பட்டிருப்பதை, சினிமா, நாடகக் கலையாளர்கள் ஊன்று கவனிப்பது அவசியம். உள்ளக் கருத்தினை தெளிவுறக் காட்டும்மாயக் கண்ணாடிகண்களாகும். வாய்சொல்லால் ஏற்படும் பலனைவிட ஆயிரம் ஆயிரம் பங்குபலன் "கண் சொல்லால்" ஏற்படும். சுருங்கக் கூறுமிடத்து நடிப்பின் ஜீவன் கண்களேயாகும். கண் நடிப்பின் வெற்றி நடிகனின் உண்மை வெற்றியாகும்.

## கூடாது

(சென்னை எஸ். கணேசன்.)

——: (o) :——

தென்னாடே திருநாடாம் திராவிடநாட்டில்
அன்னாடே அரும்பருத்தி அடர்ந்த நாடு.
கண்ணான பொன்வயல்கள் காணும் நாட்டில்
உண்ணவும் உடுத்தவும் தேம்பலாமோ?

திருவிடத்தைத் திருத்தத் திருவள்ளுவரே
திருக்குறளைத் திறமையாகத் தீட்டினாரே
அருங்குறளை அறிவோடு ஆராய்ந்திட்டும்
பெருமூடப் பழக்கம் பரப்பலாமோ?

செந்தமிழில் செத்தமொழி சேர்த்ததாலே
நந்தமிழை நான்கு மொழியாய் நசுக்கினது.
இந்நாட்டை ஈரிரண்டாய் இருக்கவைக்க
வந்த அவ்வாரியம் வாழலாமோ?

வந்தமொழி நம்மொழியை வகையாக்கொண்டு
செந்தமிழைச் சீரற்றுச் சிதைக்கக் கண்டோம்
இந்திமொழி இறுமாப்போடிங்கு வந்தால்
இந்நாட்டில் இனியேனும் இருத்தலாமோ?

——: (x) :——

## மூளைக்கு வேலை

பஸ்களில் பெண்களைக்கண்டக்ட்டர்களாக நியமிக்கவேண்டியது அவசியமா? நியாயமா?

**யோசியுங்கள்**

குறிப்பு :— நேயர்கள் அவரவர்கள் கருத்துக்களை எழுதியனுப்பலாம் எக்கருத்துக்கும் இடமுண்டு. வேண்டியதெல்லாம் தக்க நியாயங்களேயாகும். இது சம்பந்தமாய் நேயர்கள்தெரிவிக்கும் கருத்துக்களை, "பகுத்தறிவு அரங்கம்" என்னும் தலைப்பின் கீழ் வெளியிடப்படும். (ஆ-ர்)

அடிக்கிறது சூருவளிக் காற்றுப் பகையே!
மடிந்திடு மாய்ந்திடு! உயர்வெனும் பகையே!
துடிக்கிறது ஏழையுயிர் தூரநில் பசியே!
வெடிக்கிறது 'பீரங்கி' விலகிநில் பகையே!

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்
வாரப்பதிப்பு.

| சென்னை | சனி | 13-11-48 |
|---|---|---|

# சென்னை கார்ப்பொரேஷன் 1

சமீபத்தில் வெளிவந்துள்ள சென்னை கார்ப்பொரேஷன் 1947 . 48-ம் வருஷத்தில் வரவு செலவு புள்ளி விவரங்களிலிருந்து கார்ப்பொரேஷன் செல்வநிலை சீர்குலைந்து நிற்கிறது என்றுதான் சொல்லவேண்டும். முக்கியமான ஒவ்வொரு மொத்தச்செலவுக்கும், கவர்ன்மென்டிலிருந்து கடன்கள் பெற்ருக வேண்டிய நிலையிலும், வரவுக்கு மீறி செலவு செய்துவரும் நிலையிலுமே இருந்துவருவதை எவ்வகையிலும் வரவேற்பதற்கில்லை. வரி வாயிலாக வருவாயைப் பெருக்கும் வழி தேடவேண்டுமென முற்படுவது, "பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் என்று சொல்வதுபோல ஏற்கனவே வரி கொடுத்துவரும், மக்களையே கசக்கிப் பிழிவதாகும். இப்போதுள்ள நிலையில் இது சற்றேனும் விரும்பத் தக்கதல்ல.

வரவைக் காட்டிலும் செலவு அதிகமானதற்கு கமிஷனர் சொல்வதுபோல் காரணங்கள் இருக்கலாம்; ஆயினும். செல்வ நிலையைக் குலைக்கும் அளவுக்கு செலவுகள் பெருகி விட்டது என்பது நிர்வாகத் திறன் குறைவு, அல்லது "ஜாக்கிரதையின்மை." என்றுதான் சொல்லவேண்டி யேற்படுகிறது.

ஜனப் பெருக்கம் என்பதுவும் ஒரு காரணந்தான். இதனுல் ஒரு அளவுக்கு செலவு அதிகரித்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை. பெரிய வருமானம் கொண்ட ஒரு கார்ப்பொரேஷனுக்கு இச்செலவு பெரியதல்ல. அப்படியும் ஜனப் பெருக்கத்துக்குத் தகுந்தபடி பிரத்தியேக ஏற்பாடுகள் செய்து விடவும் இல்லை. இருக்கும் இடத்தையும், உட்கொள்ளும் காற்றையும், குடிக்கும் தண்ணீரையும் பகிர்ந்து கொண்டிருக்கிருர்களே யொழிய, ஏற்கனவே குடியிருந்த ஏழை மக்களும் நடுத்தர மக்களுமே பல இன்னல்களுக்கும் உள்ளாளுர்களே தவிர, கார்ப்பொரேஷனுக்கு இதனுல் அபிரிமித செலவுகள் ஏற்பட்டு விட்டன என்பது ஏற்றுக் கொள்ளக் கூடாத வாதம்; "தண்ணீர் செலவும் தோட்டிகளுக்குச் சிரமமும்" என்பது தவிர தேம்பி அழ வேண்டிய சங்கடத்தை ஜனப் பெருக்கம் உண்டாக்கி விடவில்லை.

புதியதாக குடியேறுபவர்களைத் தடுக்கவும், வேலையின்றி பூமிக்குப் பாரமாய் இருக்கும் மக்களை நகரத்தினின்று வெளியேற்ற வேண்டுமென்றும் கவலை கொள்ளக் காரணமேயில்லை, ஏன்? பெருக்கத்துக்குக் காரணமெனக் கருதப்படும் மக்கள் பங்களாக்களில் நுழைந்து விடவில்லை. பணக்காரர் வீடுகளை ஆக்ரமித்து விடவில்லை. சர்க்கார் காரியாலயங்களைக் கைப்பற்றி விடவுமில்லை. அவர்களால் கஜானுவும் காலியாய் விடாது என்பதை உறுதி கூறுகின்ருேம்.

அத்தகை யோர்களை இருகையேந்தி வாவென்றழைத்து உள்ளன்புடன் ஏற்று இருக்கும் இடத்தையும் உண்ணும் உணவையும் பகிர்ந்துகொடுத்து, உடுக்கும் ஆடையைக் கிழித்துக் கொடுத்து. அன்புடன் ஆதரித்தருள் புரிவது அத்தகை யோறைப் போன்ற பரம ஏழைமக்களே யல்லாது வேருெருவருமல்ல வென்பதை எடுத்துக்கூற விரும்புகின்ருேம்.

சராசரி கணக்குப் போட்டு, வீடு ஒன்றுக்கு 14 பேர்கள் வீதம் குடியிருக்கிருர்கள எனக் கணக்கிட்டுக் காண்பிக்கிருர் காருண்ய கார்ப்பொரேஷன் கமிஷனர் அவர்கள். ஜனப்பெருக்கத்தை விளக்கிக் காட்டவும் வீட்டு வசதி போதாது என்பதை எடுத்துக் காட்டவும் அதனுலேயே ஏழைகளின் சுகாதாரத்தைக் கவனிக்க முடியவில்லை என்று நொண்டிச் சாக்குச் சொல்லவுமே இக்கணக்குப் பயன்படலாமேயன்றி இருக்கும் நிலைமையை உள்ளது உள்ளபடியே எடுத்துக் காட்டுவதாகாது. மேலும் கமிஷனர் உள் வருபவர்களைத் தடுக்கலாம். வேலையின்றி இருப்பவர்களை வெளியேற்றலாம். ஆனுல் பிரஜா உற்பத்தியால், விஷம்போல், பெருகிவரும் ஜனப்பெருக்கத்தைக் கமிஷனர் என்ன செய்யவேண்டுமென்கிருர் என்பது விளங்கவில்லை. இவர்களையும் பிரஜா உற்பத்திக்குக் காரணமாயிருப்பவரையும் விரட்டவும் ஒருவழி தேடிவிடின் கார்ப்பேரஷனுக்குள்ள அலுவலும் செலவும் மிகக் குறையுமென்பதை கமிஷனர் அறியாததல்ல. நாளாவட்டத்தில் கமிஷனரோ, கார்ப்பரேஷனே கூட தேவையில்லை என்ற நிலையும் ஏற்படுவது திண்ணம். ஆனுல் இது எவ்வகையிலும் சாத்தியமாகாது. நீதியான தர்க்கமும் ஆகாது. அறிஞர் ஒத்துக்கொள்ளும் நியாயமும் அல்ல.

வீட்டுக்குப் பதினான்கு பேர்தான் எனக் கேட்டவுடன் வெளியில் வசிப்பவர்கள் சென்னையைக்கண்டு பொருமையுங் கொள்ளலாம். சென்னையில் குடியேறின் வசதியுடன் காலந்தள்ளலாம் என்னும் ஆசைக்கும் தூண்டுதலுக்கும் அடிமையாகலாம். ஆனுல் உண்மை முற்றிலும் மாருனது. இதை வெளிநாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம்.

குடியிருக்க ஜனக் கூட்டம் போதாமல் வௌவால் குடியிருந்து வரும் பரந்த பங்களாக்கள் பலவுண்டு என்பதை நாமறிவோம், பங்களாக்களைச் சுற்றிலும் பரந்த வெளியுண்டென்பதையும் அறிவோம். கவனிப்பாரின்றியோ அல்லது கவனிப்பதற்கு வழியில்லாமலோ குட்டிச் சுவராக வௌவால் அடையவும் லாயக்கில்லாமல், பாழாகக் கிடக்கும் கட்டிடங்கள் இச் சென்னையிலே பலவுண்டு என்பதையும் நாமறியாததல்ல. சாதுக்களுக்கும் சோம்பேரிகளுக்கும் மற்றபடி இன்னும் மற்றவர்களுக்கும் நிழலும் சுகமும் தரும்படியான கோயில்களும் மூலைக்கு மூலை சத்திரங்களும் இல்லாமலில்லை. கடலைப்போல் கட்டி ஓரிருவரே குடியிருந்து வரும் வீடுகளும் அனந்தம். வருஷத்தில் சில மாதங்களே புழங்கப்பட்டு மற்ற காலங்களில் சாத்திக் கிடக்கும் அரண்மனைகளும் இதர விடுதிகளும், இடையிடையே காலி நிலப்பரப்புகளும் நிறைய உண்டு.

என்ருலும் இவைகளுக்கும் ஜனப் பெருக்கத்துக்குக் காரணம் எனக் கருதப்படும் மக்களுக்கும் ஏதேனும் சம்மந்தம் உண்டாவென்பதை வாசகர்களே சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேம். அவர்கள் யாவரும் ஏழைகளுடன் கலந்தும் குழாய்க்கும் கக்கூசுக்கும் மண்டை உடைத்துக் கொண்டும் திறப்பு மைதானக்களிலும் பிளேட் பாரங்களின் மீதும் தூங்கியும் காலத்தைக் கடத்தி வருகிருர்களே தவிர இவர்களால்அசௌக்கியம் என்ன ஏற்பட்டுவிட்டது என்று விரல் விட்டுச் சொல்ல முடியுமா என்றுதான் கேட்கின்ருேம். இவ்வுண்மைகள் எவருக்கும் தெரியாதவைகளா என்றுதான் கேட்கின்ருேம். இதர்க்காக கார்பொரேஷன் எவ்வென்ன வசதி செய்து கொடுத்து எவ்வெந்த வகையில் நஷ்டப்பட்டுவிட்டது என்றுதான் கேட்கின்ருேம்,

ஏழைகள் வசிக்கும் பேட்டைகளும் தெருக்களும் மாற்ருந்தாயின் கொடுமைக்கும்உள்ளாக்கப் படவில்லை என்று எவரேனும்சொல்ல முன்வரமுடியுமா? அதற்குத் தகுந்தாற்போல கட்டுப்பாடு உத்திரவுகளால் வீட்டுக்குச் சொந்தகாரர்களும் கடின சித்தம் படைத்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்று சொல்லலாம். இடிந்து புகையடைந்த சுவர்கள், ஒழுகும் கூரைகள், மேடுபள்ளங் கொண்ட தரை. எத்தனை அரையிருந்தாலும் எத்தனை நபர்கள் குடியிருந்தாலும் ஒரே கக்கூஸ் குழாய்க்கு அடிதடி. கக்கத்தில் புத்தகத்துடனும் கையில் பென்சிலுடனும் பார்வையிட வரும் உத்தியோகஸ்தர் பலர். வந்தென்ன பலன்? பார்த்தென்ன பயன்? பழைய கருப்பன் கருப்பனே என்றபடிக்கில்லாமல் வேருெரு விசேஷமும் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. ஆகவே வீட்டுக்காரர்களிடத்திலிருந்து அன்பின் வழியாகவோ கெஞ்சிக் கூத்தாடியோ அல்லது அதிகாரத்தின் மூலமாகவோ எவ்வித நன்மையும் ஏற்பட முடியாத நிலை ஏற்பட்டு விட்டதை நினைக்க வருந்தாமலிருக்க முடியாது, வீட்டுக்காரர்களின் பேரிலும் மற்றவர்களின் பேரிலும் பழியை சுமத்துவது தான் நியாயமாகுமா? வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் வீட்டில் வசிக்கும் குடிக்கூலிக்காரர்கள் இவர்களில் எவரைவிட எவர் நல்லவர்? என்னும் முடிவளிக்கும் வேலை எமக்கு வேண்டாம். அதைக் கிளறின் நாவிதன் குப்பையைக் கிளறினதேயாகும். நிலைமையை நாமாக சீர்படுத்திக்கொள்ள வேண்டியதே தக்க பரிகாரமாகும். வாதியும் பிரதிவாதியும் ஒன்று சேர்ந்துவிடின் வாதிக்கும் வக்கீலுக்கென்ன வேலை? சாக்கிகளுக்குத்தான் சமன் அனுப்ப வேண்டிய அவசியமென்ன? கோர்ட்டுக்கு நடக்க முழங்காலுக்கு எண்ணை போட்டுக்கொள்ள வேண்டிய நிலைமை எப்படி உதிக்கும்? ஆனுல் நிலைமை அவ்வளவுக்கு சீர்படவில்லை. இவ்வழியே சேவைசெய்ய வக்கீல்களும் இவ்வுலகிலில்லை, செய்யவும் அவர்களால் முடியாது. கோர்ட்டுகளையும் கச்சேரிகளையும் நாடத்தான் வேண்டியிருக்கிறது. அதுபோலவே இங்கேயும். ஏழைகள் இருக்கும்படியான தெருக்கள் பேட்டைகள், இவைகளின் சுகாதார ஏற்பாடுகளுக்காகவும் இன்னும் இதர சௌகரியங்களுக்காகவும் நகரத் தந்தைகள் என அழைக்கப்பட்டு வரும் கௌன்சிலர்களையும் அவர்களின் மூலம் கார்ப்பரேஷனையுமே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. எதிர்பார்க்க உரிமையும் உண்டு. செய்து கொடுக்க கௌன்சிலர்களும் கார்ப்பொரேஷனும் கட்டுப் பட்டிருக்கிருர்கள் என்பதை மக்களே அறிவார்கள். அப்படியிருக்க இத்துறையில் இதுவரையும் கார்ப்பொரேஷன் சாதித்த வேலையென்ன? ஜனப்பெருக்கம் எனக் கூச்சலிடுவதற்குக் காரணமென்ன? இவ்வேலைகளைக் காட்டிலும் அதிக முக்கியம் வாய்ந்த வேலைகள் எவ்வென்ன? அப்படியிருக்க 'அவசியமான வேலைகள் பல செய்யப் போதிய பணமில்லை' என்று சொல்வது நியாயந்தானு? இச் சமாதானத்தை ஏழை மக்கள் எவ்விதம் ஏற்றுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிருர்கள்? என்பது நமக்கு சற்றேனும் விளங்கவில்லை. ஆதலால் இவைகளை ஊன்றிக் கவனித்து உண்மைகளை ஆராய்ந்து ஊழல்களை வெளிப்படுத்தி, உரிமைகளுக்குப் போராடி, உற்றதையடைய வேண்டியது நியாயந்தானே,

——: (x) :——

## அரசியல் தொகுப்புசபையில் இந்தி எதிர்ப்பு

——: (x) :——

"ஒழியட்டும் கட்டாய இந்தி நுழைவு; ஒழியட்டும் வடநாட்டு தலைவர்களின் மொழி ஏகாதிபத்தியப் போக்கு" தென்னிந்தியாவில் மிகவும் செல்வாக்கு மிகுந்த ஒரு பிரிவினரின் கருத்துக்களை, அடக்கி நெறித்து, ஒழிக்க சிலர்கொள்ளும்எண்ணம், ஒழிக்கப்படட்டும். தெற்கத்தியாரின் கோரிக்கைகள்விஷயத்தில், நெஞ்சீரமற்றபோக்கிலும், தலைகீழ் பான்மையிலும் நடக்கவேண்டாமென்று எச்சரிக்கிருேம்.

என்பதுபோன்ற இந்த பரணி முழக்கங்கள், எச்சரிக்கை, நற்போதனை, மெய் மொழிகள் எங்கே? எப்போது? ஒலித்தன!

திராவிடகழகக் கூட்டத்திலா? இந்தி எதிர்ப்புக் கும்பல் களிலா? திராடவிடநாட்டின் தனிப் பெரும் உரிமைப்போரின் தனிப்பெருந் தலைவரான பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களின் பல் போயும் சொல் வன்மை போகாத, அந்தப் பகுத்தறிவு மெய்மொழி திருவாயிலிருந்தா?

தமிழ்ப் பெரியார், திரு. வி. க அவர்களின் திருவாய் மொழிகளா இவைகள்?

இல்லை இல்லை!

பின் இந்த பரணி முழக்கம், "அபாயச் சங்கு" எச்சரிக்கை எங்கே ஒலித்தது?

பாருங்கள் வடக்கு நோக்கி. தீட்டிக்கொண்டு கேளுங்கள் உங்களுடைய நேர்மைக் காதுகளை.

யமுனைக்கரையிலே, இந்த 30 கோடி மக்களையாளும் ஆட்சியாளரின் தலைமைப் பீடமான அந்த டில்லி மாநகரிலிருந்துதான்! இதென்ன கட்டுக்கதையா? தமிழ்

மொழிப் பற்றுக்காய்ச்சல் விகாரியினால் ஏற்பட்ட பிதற்றலா? என்று உங்களுக்குசந்தேகமும்பரிதாபமும் ஏற்படுகிறதா? எமக்குக்காய்ச்சலும் இல்லை; விகாரியும் கிடையாது. பகுத்தறிவுக்கும், குறுகிய மனப்பான்மையால் ஏற்படும் கோளாறுகளின் விளைவான, "காய்ச்சல்" களுக்கும், சம்பந்தமே கிடையாது. இது எமது கற்பனையல்ல. அரசியல் தொகுப்பு சபையில் நடக்கும் வாதப் பிரதிவாதங்களின் மணிச்சுருக்கம்; பகுத்தறிவின் "திருக்குறள்" இவைகளாகும்.

திராவிடத் தனிப் பெருந் தலைவர் அவருடைய வழிகாட்டுதலிலே, இயங்கும் திராவிடஉரிமைப்போர், கழகம் இட்ட இந்தி எதிர்ப்புத் தீப்-புடம், தென்னாட்டில் மாத்திரமல்ல, அதோ, அதோ பற்றி எரிகிறது பாருங்கள் நாடெங்கும். கங்கையும், யமுனையும் கொட்டும் தண்மையையும், கொதிக்கச்செய்து கொண்டு மூள்கிறது மூள்கிறது பாருங்கள் அந்த டில்லிமா நகரிலே.

கனம் ஆச்சாரியரவர்களின், சீடசிகாமணிகளாகிய - அல்லது - சீடர்களென்பதாகக் காட்டிக்கொள்ள அல்லது அவர் கவர்னர் ஜெனரல் ஆகவிருப்பதால், அவருடைய கருணைகடாட்சத்தைப் பெற அல்லது அவருடையவும், மற்றும் மேலிடத்தில் திருமாளிகை கொண்டிருக்கும், மற்ற "மகா விஷ்ணுக்களின்" "ஆக்ஞா" சுதர்சன் சக்கிர பாய்ச்சல் ஏற்படுமோஎன்று திகில் கொண்டும், நுழைந்தவர்-நுழைகின்றவரைக்- கட்டாயமாக வடவர் இந்தி மொழியை - இலக்கணமோ அடிப்படையே இல்லா-காங்கிரஸ் மா நாட்டுக் கொட்டகை போன்ற இந்தி மொழியை, சகிப்பின், சாத்வீகத்தின் கோயிலான தென்னாட்டில் உயிர் பெற்றும் ஊசலாடும், பச்சிளங்குழந்தைகளின் பச்சிளம் உள்ளத்திலே, மூளையிலே,

"சிட்டுக் குருவியின் தலையில், யானை தேங்காயை வைத்துக் கட்ட வேண்டாம். அந்தத் தேங்காயைத் தாங்கும்வலிமையை அந்தமண்டைகள், அடைந்தபின்னர் வேண்டுமானால்கட்டுங்கள் வலிந்துவலிந்து" என்றுதான் பெரியாரும், திராவிட கழக மற்ற முகாமிகளும், முறையிடுகின்றனர். —நற்போதனை செய்கின்றனர்.

இதைக் கேட்டு, இந்திமொழிக் காதலர்கள் (புதுக்காதல் வேகத்தின் விபரீதத்தாலே) கூறுவதும் பாடுவதும் என்ன? "ஒரு சிறு கூட்டத்தினர் - காலிக்கும்பல் - அரசியல் ஆதிக்க பேராசைகொண்ட 'நாம்கே வாஸ்தே'க்கள் போடும் வெறும் 'சாக்குருவி'க் கூச்சல் இதைக்கண்டு ஏமாறவேண்டாம்."

என்பதேயாகும்.

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சுதான். எனவே, கல்விஅமைச்சரும், தான்பெற்ற இந்த 'அருமை' குழந்தையின், உயிருக்காக மன்றுடுவது இயற்கைதான். ஆனால், அகாலத்தில் பிறந்த குழந்தைக்கு ஒட்டுப் போட்டு நிறுத்துவதும், ஆயுள்நீக்கச்செய்வதும்சாத்தியமா என்பதை யோசித்துப் பார்க்கும் படிதான், ராமகிருஷ்ண பரம ஹம்ச ஞானானந்தரின் ஞான சீடரை, பக்தி வினயபூர்வமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தென்னாட்டுத் திராவிடக் கழகத்தினரும், காங்கிரசின் அடிநாள் ஊழியருமான பெரியாரும், "காலிகள் கூட்டமென்றால், அதோ அரசியல் தொகுப்பு சபையில், இந்த 'இந்தி எதிர்ப்பு' முழக்கம் செய்கின்றாரே, தென்னாட்டுக் காங்கிரஸ் சபை ஆட்சியாளரும், காங்கிரஸ் பக்தகோடிகளும் சேர்ந்து தேர்ந்தெடுத்து, அனுப்பிவைத்தார்களே! தங்களுக்காக புது அரசியலை தயாரிக்கும்படி- அந்தத் 'தலைவர்களை' என்னவென்று கூறும் இந்த காங்கிரஸ் வாயும் நாக்கும்?

அங்கே இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்தது யார்? திராவிடரா? திராவிடர் பிரதிநிதிகளா? திராவிடக் கழகக் கைக்கூலி கங்காணிகளா? இல்லையே! திராவிடக் கழகத்தின் பால் கடும் எதிர்ப்புக் காட்டும் இனத்தைச்சேர்ந்த ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரல்லவா?

இந்த மாபெரும் இந்திஎதிர்ப்புக் குற்றத்திற்காக அவரை, 'செங்கோட்டை'யிலே திரு மாளிகை கொள்ளச் செய்வார்களா? என்று கேட்கும் நியாய உலகம் - நேர்மைக்கு மதிப்புத்தரும் மதிஉலகப்!

"புதுக் காதல்" கண்மூடிப் போக்குடையதுதான். இருந்தும், பிறர் எச்சரிக்கை செய்வதைக் கேட்டாவது நல்வழித் திரும்புவது தான், தனக்கும் தன் பிற்கால வாழ்வுக்கும் ஏற்றதென்பதை உணர்ந்து தான் புத்திசாலித் தனமென்பதை நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. இதை விடுத்து; நான் பிடித்த முயலுக்கு, மூன்றே கால் என்று கூறி, நீட்டிக்கொண்டிருக்கும் நான்காவது காலை கைகொண்டு மறைக்கவோ, அல்லது வெட்டி எறிந்துவிட முற்படுவதோ புத்திசாலித் தனமாகுமா வென்பதை -அறிவூட்டும் இலாகா அமைச்சரவர்களே! - சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்புக் காணவேண்டும் என்பதே, எமது தாழ்மையான, விண்ணப்பம். "கலைமகள் அருள் தரு அமைச்சரவர்கள் சிறு மாமதிவாணர்தான் பொதுநலத்துக்காகத் தமது சொத்து, சுகம், வாழ்க்கை ஆகிய அனைத்தும் தியாகம் செய்தவர் என்பது உலகமே அறியும். கழகத்தின் எதிர்காலத் தலைவர்களை "சிருஷ்டிக்க"க் கலைக் கழகம் நல் வாழ்க்கைக்கு வழி காட்டும் கழகம், பெரிய நாயக்கன் பாளையத்திலே வைத்து நடத்தும், ஒப்பற்ற பொதுநல "பரம ஹம்சர்" ஒரு மாமாங்கத்திற்கு மேலாக பூங்குழந்தைகளிடம், நெருங்கிய தொடர்பு கொண்டு வருபவர். குழந்தைகளின் அறிவுச் சக்தியைக் கணித்தறிந்திருக்கும், 'அனுபவஅகராதி' என்றும், துணிந்து கூறலாம். அப்படியிருந்தும் இவர், தாம் கொண்ட பதவிமேடைக்கேற்ப, நாடகம் காட்டி, ஆட முற்படுவது கண்டுதான் ஒரு வகையில் வருத்தமளிக்கிறது. பிற்காலப் பொதுநலத்திற்காகத்தான் இந்த "கைலாச யாத்திரை"யைத் தொடக்கம் செய்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய நல்லெண்ணத்தில், 'விஷ'மிருப்பதாக யாரும் சொல்லமுடியாது; ஆனால், இந்தக் "கைலாச யாத்திரை" யில் எல்லாரும் வாக்காளர்களாக இருக்க முடியாதே! கால் தேய மலைமேல் ஊர்ந்து சென்று, ஆண்டவன் அருளைப் பெற்று, உயிருடன் திரும்பி வருவதற்கு எல்லாருக்கும் வரமும் திறமும், தெய்வாம்சமும் வேண்டாமா?

"கலியுக ஜனகரான" ஓமந்தூராரும், அண்மையிலே தமது 'சத்திய நிலை'தடுமாறி, இந்திஎதிர்ப்பாளர்கள்மீது, குறைபுராண, பாராயணம் நடத்த முற்பட்டிருப்பது, மிக, மிக வருத்தம் தருகிறது. இதே சமயத்தில், வடநாட்டிலே, அரசியல் நிர்ணய சபையிலேயே, இந்த இந்திஎதிர்ப்பு என்ற தீ, பற்றி எரிய முற்பட்டுவிட்டது.

'ஓமந்தூரார் - அவினாசியார் கம்பெனிக்கே' கரி பூசியது போலாகி விட்டதே! இதை எண்ணத்தான், நமக்கு மிக, மிக வருத்தம் ஏற்படுகிறது.

இவர்களைச் செல்லாக்காசுகளாக ஆக்க நடக்கும் சூழ்ச்சியோ இது என்றும் சந்தேகம் கொண்டு, தத்தளிக்கச்செய்தது. எப்படி? எனக் கேட்கலாம், இந்தியை ஒழிக்க உயிரைக் கொடுத்துக்கொண்டு பாடுபடுபவர்கள், திராவிட இனஅமைச்சர்கள் கனம். ஓமந்தூராரும், அவனாசியாரும் தான். ஆதரிப்புப் பிரசாரம் நடத்துபவர்களும், கனம் மாதவ மேனன், பக்தவத்சலங்கள் தான்.

கனம் ராஜன் கம்பெனியார், இவ்விஷயத்தில், அதிகம் வாய் திறப்பது கிடையாது. இத்துடன் வடநாட்டிலே சென்று, கவர்னர் ஜெனரலும் மொழியில் கட்டாயத் திணிப்புமுறைகூடாதென்று கிதோபதேசம்செய்கிறார்-தாம் செய்ததற்குப் பிராயசித்தமாக இப்போது மற்றொரு ஆச்சாரியும் எதிர்ப்பு முரசு கொட்டுகிறார். இதனால், "கெட்டபிள்ளை" களாவது யாரென்று யூகித்துப் பார்க்கும்படி நமதுமதிப்பிற்குரிய இருமந்திரிகளை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். இனியாகிலும் மெய்க்கண் திறந்து, பார்க்கட்டும், தென்னாட்டு பகுத்தறிவுப் பெரியார் மூட்டிய மெய்யறித்தீ—குருட்டு நம்பிக்கைகளையும் பகுத்தறிவு விட்ட போக்குகளையும் சுட்டு எரித்துக்கொண்டு சூரைக்காற்றால் தூண்டிவிடப்பட்ட காட்டுத் தீப்போல் தென்னாட்டிலிருந்து வடநாட்டிலும் பரவி மூண்டு மூண்டு முழங்கி எரிவதை தகாத முறையை ஒழிக்கப்பாடுபட்டு வெற்றி கண்ட பெருமையை-திராவிடத் தனிப் பெருந்தலைவருக்கு அளிக்கப் போகிறதோ, அல்லது வேறொருவர் தட்டிக்கொண்டுபோக விட்டு விடுவதுதான் ஓமந்தூர் ராமசாமி மந்திரி சபையின் நோக்கமா என்பதை அறிந்துகொள்ள தமிழகம்-ஆவலும் கவலையும் கொண்டு எதிர்பார்த்து நிற்கிறதென்பதையும் இந்தத் திராவிடநாட்டு வட்டார மந்திரிகளுக்கு எடுத்துக்காட்டவும் விரும்புகிறோம்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாணவர்கள் ஸ்டிரைக்

10-11-48 முதல் இஞ்சினீயரிங் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களுக்கு திறமைவாய்ந்த உயர்ந்த ஆசிரியர்களாக நியமிக்காததால் தங்கள் கல்வி வளர்ச்சி குறைபடுகிறதென்றும் இஞ்சினீயரிங் பகுதி நிர்வாகத்தை அதன் தலைவர் சார்பிலேயே விட்டுக் கொடுக்காததால் பெரிய பல்கலைக் கழக நிர்வாகத்தின் கீழ் தங்கள் நியாயமான தேவைகளுக்குப் போதிய பொருள் திட்டம் அனுமதிக்கப்படாமலிருந்து விடுகிறதென்றும் முறையிடுகிறார்களென்றும் தெரியவருகிறது. (ஒ. நி)

## என்ன சுதந்தரமடா!

(க. மாணிக்கவாசகன்)

நெற்றிவியர்வை நிலத்தில்பாய நாளெலா முழைத்திடும்
உற்றதோழன் உழவனின்று பெற்றானோ சுதந்திரம்?
வற்றியமுலை இழுத்து வாடுமோர் மகவின்தாய்
பெற்றாளோ சுதந்திரம்? பின் என்னவோது தந்திரம்?

உழைத்துழைத்து உருப்போன உயிரிலா தொழிலாளி
பிழைத்திட வகையைக்காணேம் பெற்றதென்ன சுதந்திரம்?
'தழைத்திடும் அசோக ராஜ்யம்' என்று சொன்ன வாக்குபோய்
இழைப்பது கொடுமையாச்சு இதுஎன்ன சுதந்திரம்?

அல்லலுற்று, ஆடையற்று, ஆண்டியான நம்மிடை
கள்ளமார்க்கட் களிக்குது கவனியாத சுதந்திரம்?
நெல்லைப் பதுக்கி கொள்ளையடிக்கும் கள்ளர்கண்டு பிடிக்கலை!
வெள்ளையர் வெளியேறியும் வருத்தும் துன்பம் தீரலை!

கற்ற அறிஞன் தமிழ்ப்புலவன் கஷ்டம் தீரவழியில்லை
மற்றதோழ தொழிலாளிக்கும் மனமிரங்க மனமில்லை!
குற்றுயிராய் அரிசியின்றி மக்கள்வாடும் நேரத்தில்
பற்றுக்காணேம் பயிர்த்தொழிலில் பலனிலா சுதந்திரம்!

ஆங்கிலத்தான் ஆட்சியிலே ஐய்யய்யோ அநியாயம்
'வாங்குவதா சம்பளங்கள் ஆயிரமா'? என்றவர்
தாங்குகிற 'நம்ம சர்க்கார்' சம்பளத்தை நோக்கினால்
வீங்குதடா ஏழைநெஞ்சம் இதுஎன்ன சுதந்திரம்?

(6.ம் பக்கத்தொடர்ச்சி)

வேண்டும் என்று வாய்திறந்து கூற வேண்டிய அவசியமே நேரிடவில்லை. கணவன் குறிப்பறிந்து நடக்கும் நற்பெண்டாட்டியாக நடத்துகொண்டாள், தனக்கு இதுவேண்டும் அதுவேண்டும் என்று கணவனிடம் வாய்திறந்து கூறியறியாள். அவனே 'பேசு பேசு' என்று இன்றைக்கெல்லாம் உதைத்தாலும் கூட அவள் வாயில் பதில்சொல்வராது.

இது உலகம் கண்டறியாத அதி ஆச்சரியமாக இருக்கிறதே என்று நண்பர்கள் பிரமிக்கலாம், அவள் எதிர்பேசாததற்குக் காரணம் என்னவாக இருக்கும். என்று யூகிக்க முடிகிறதா! இதில் பிரம்ம ரகசியம் ஒன்றுமில்லை. மௌனசாமியின் மனைவி பிறவிப் பேசாமடந்தை—ஊமை.

# இதோ! ஈரோட்டு லெனின்!

**பெரியமேட் முரு. அன்புபதி**

—:o:—

பாராண்ட பண்டைத் தமிழரின் பரம்பரையிலுதித்த பழந்தமிழனே! விழித்தெழு! உறக்கமேன்! முச்சங்கம் அமைத்த மூவேந்தற்குடியில் பிறந்த அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்சிங்கங்காள்! பூனைகள் அல்லர் அவர் வழி வந்தோர்’ புலிநிகர் மாந்தர்” என சூளுரைத்து வெற்றி முரசு கொட்டு! மானம் போயினபின் இம்மானிலத்து வாழ்வதுதான் மாண்புள்ள தமிழரின் மறபா? கனகவிசயன் என்ற ஆரிய அரசனின் தலையிலே கல்சுமக்க வைத்து இமயத்தில் சென்று “வில், கயல், புலி”க்கொடி பொறித்து வீரத்தோடு வாழ்ந்தோரின் வழித்தோன்றல்களல்லவா நாம்.

அயல் நாட்டிலிருந்து ஆட்டையும், மாட்டையும், ஓட்டிக்கொண்டு இத்திரு நாட்டைபடைந்து அடைக்கலம் புகுந்த நாடோடிக் கூட்டமல்ல நாம்? நாட்டிற்கே சொந்தக்காரர்களாய் நல்லாட்சி நடத்தி நாடாண்ட நற்றமிழரின் வாழையடி. வாழையாய் அவர் வழிவந்த மாண்புமிக்க வீரத்தமிழரின் மறபிலுதித்த மறத்தமிழர் நாம்.

எகிப்து, கிரீஸ், ரோம், சாவகம், முதலிய மேல்நாடுகளோடு வியாபாரத் தொடர்பு கொண்ட திராவிட இனம்தான் இன்று பர்மாவிலே—பதைபதைக்க, நெட்டாவிலே—நெஞ்சம் நெகிழ மலேயாவிலே—மனம்குமுற, சிலோனிலே சீற்றமுற்ற சீமான்களிடம் சிக்கி சிதைவுற கூலிகளாம், குற்றேவல் செய்யும் கொடியநிலை ஏன் ஏற்பட்டது என்று உன் மனக்கண்முன் நிறுத்தி சிந்தித்துப்பார்! வீரம், தியாகம், மொழி, கலை, பண்பு, நாகரீகம், வியாபாரம், சிற்பம், கைத்தொழில் இவை உச்ச நிலையடைந்து மேன்மையுடன் விளங்கிய திராவிடர் இன்று, அரசியல், பொருளாதாரத்திலே, வடநாட்டவருக்கும் சமுதாயத் துறையில் பார்ப்பனருக்கும் என்றென்றும் அடிமையாய், “வாள் போயினும் தாள் பணியாது” வாழ்ந்து வீழ்த்தப்பட்ட இனமாய் இருக்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? எப்படி என்று எண்ணிப்பார்?

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற உயர்ந்த பண்போடு வாழ்ந்த நம்மிடத்தே, மும்மூர்த்திகள், முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர், அஷ்டதிக்கு பாலகர்கள் முதலான முட்டுக்கட்டை தேவதைகளையும், பிராமண, வைசிய, க்ஷத்திரிய, சூத்திரரென நால்வகை சாதிகளையும், பஞ்சமன் என்ற ஐந்தாவது சாதியையும் ஏற்படுத்தி நம்பும்படியும் செய்து இந்நாட்டிலே ஆரியத்திற்கு வித்தூன்றி கடைபிடித்துவரும் சதிகூட்டத்தாரின் அட்டகாசத்தை அழித்தொழிக்கத்தான் தமிழர்—திராவிடா! அதோபார்! ஈரோட்டுப்போர் முரசு ஒலிக்கிறது. ஏங்கிக் கிடந்த எண்ணற்ற என்போன்ற மக்களின் இதயத்திற்கோர் இணைவிருந்தாய் இயங்குகின்றது பார்! ஆம் அவர்தான் தம் வாழ்க்கையில் வீழ்ச்சியே காணாத வெண்தாடிவீரர்! ஆம்! அவர்தான் ஈரோட்டுலெனின்! பெரியார்! ராமசாமி.

கடந்த 30 ஆண்டுகாலமாக சுயமரியாதை என்ற இயக்கத்தின் பேரால் மூடப்பழக்க வழக்கமென்னும் முட்புதரை அழித்தொழிக்க என்போன்ற வீர இளைஞர்க் கூட்டத்தைத் தட்டி எழுப்பியவர்தான் **பெரியார் ரஈமசாமி.**

உயர்ந்தவன்—தாழ்ந்தவன், ஏழை—பணக்காரன், தொழிலாளி—முதலாளி, ஆண்டை—அடிமை என்ற பேதங்களைக் கற்பித்து இதெல்லாம் ஆண்டவன் வகுத்த வழி, முன்ஜென்மத்தில் செய்த பாவ—புண்ணியமென்றும், தலைவிதி யென்றும் ஏமாற்றித்திரியும் ஓர் எத்தர்க் கூட்டம் எப்படி இந்நாட்டிலே வேறூன்றிற்று என்று சிந்தனை செய்ய பாமரமக்களுக்கு எடுத்துக் காட்டியவர்தான் **பெரியார் ராமசாமி.**

மாம்பலங்களும், மைலாப்பூர்களும், சௌகார் பேட்டைகளும், திருவல்லிககேணிகளும், மாடமாளிகை கூடகோபுரங்களாகத் திகழ, இடிந்த கூரை, சரிந்த சுவர்களிலே வசதியற்ற வாழ்க்கையிலுழலும் மக்களுக்கு சிந்தாதிரிப்பேட்டை, ஆற்றோரங்களும் சைணடசார் பிளாட்பாரங்களிலும் ஓட்டேரி பெரியமெட் போன்ற இடங்களிலும் சேரி என்று தனியாக ஒதுக்கி தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறவிடாமல், ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் சுதந்திர ஆட்சியில் ஏன் இருக்கவேண்டும் என்று அஞ்சா நெஞ்சத்தோடு அரசியலாரை அதட்டிக் கேட்டவர்தான் **பெரியார் ராமசாமி.**

பார்ப்பானை ஐயரென்ற காலத்தைப் போக்கவும், ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை இந்நாட்டினில் என்ற நிலை ஏற்படவும் மக்களெல்லாம் சமம் என இடித்துக்கூறி.

“இருட்டறையில் உள்ளதடா உலகம்”
சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே.
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே,
வாயடியும் கையடியும் மறைவதென்நாள்;
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றை;
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார்தமை;
வெருட்டுவது “பகுத்தறிவே” இல்லையாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்.

என்று பாடிய பாரதிதாசனின் பாடலை மெய்ப்பிக்கும் நாள் எந்நாளோ? அந்நாளே இந்நாட்டு மக்களும் விடுதலையடையும் நாள் என்றே ஓயாமல் உழைத்து, உண்மையைக் கடைபிடித்து, உற்றதையே செய்து ஊருக்கு வழிகாட்டிவரும் உத்தமரே **பெரியார் ராமசாமி.**

**வாழ்க பெரியார்.**

# எதிர்பேசா மனையாட்டி

—:o:—

யாருக்காவது இந்த அதிர்ஷ்டம் கிடைக்குமா? எதிர்பேசா மனையாட்டியோ, எறுக்குமாறு செய்யாத பெண்டாட்டியோ, குறைபுராணம் பாடாத உத்தமியோ, வாய்ப்பதென்றால்......? இதெல்லாம் வள்ளுவர்—வாசுகி கதையோடுதான் என்றே நவயுகம் கூறும்.

காலை எழுந்ததும் கணவன் மெல்ல அடுப்புப் பக்கம் சென்று “என்ன ஆச்சோ” என்று மெல்ல கேள்வி போடுகிறான். அம்மாள் ஜீயோ “ஆமாம் எல்லாமாகும். இந்த ஈரவிறகைக் கொண்டுவந்து என்தலையில் போட்டுவிட்டு பிராணனை வாங்குவது” என்று திருகு முறையில் பதிலளிப்பார். என்ன சாதம் குழைந்திருக்கே” என்றால் “இந்த பாழும் ரேஷன் அரிசியை நீங்கள்தானே வாஙகிவந்து கொட்டினது” என்று எதிர்பாணம் கிளம்பும்.

படிக்கத்தெரிந்த நாகரீக நங்கை. கணவன் சாப்பாட்டிற்கு வருகிறான். அம்மாளோ புத்தகப் படிப்பில் ஆழ்ந்திருக்கிறார். ஐயா, உடுப்பைக்களைந்துவிட்டு மனைவியாரிருக்கும் இடத்திற்கு அண்மையில் சென்று ஒருகனைப்புக்கனைத்து ஆஜர் கொடுக்கிறார். அம்மாள் தமது கவனத்தை சற்றேதிரும்பி “ஓ! வந்துவிட்டீர்களா! அதோ செம்பில் தண்ணீர் வைத்திருக்கிறேன். கைகால் அலம்பிக்கொள்ளுங்கள். இலை போடுகிறேன்” என்று உத்தரவாகும். கைகால் அலம்பிக்கொண்டு ஐயா, முன்போல் மறு ஆஜர் தருவார். அம்மாள்:- “இதோ வந்துவிட்டேன்” என்று சொல்லி, புத்தகத்துடன் குலாவிக்கொண்டிருபபார். “வந்துவிட்டேன் என்று என்ன படித்துக்கொண்டிருக்கிறாய்” என்று கேள்வி பிறந்ததும் “தாகூர் கதைகள் இதோ கதையை முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்” என்று பதில் பிறக்கும். இதற்குக் கணவனின் பேச்சை மறுக்காமல் மறுப்பது என்று பெயர்போலும், சிலரோ, இது வேண்டும் அதுவேண்டும் என்று பட்டியல் சமர்ப்பித்தபடி இருப்பார். கணவன்’ கைவிரித்தாலோ, வருணாஸ்திரப் பிரயோகத்தைக் கைக்கொண்டு விடுவர். பெண்ணின் கண்ணீரைக் கண்டு பேயும் இரங்கும் என்று வாசகம்கூறும்போது, ஒரு ஆண்மகன்—அதுவும்தன் வயிற்றுப்பாட்டு சக்தி தேவதையின் கண்ணீரைக் கண்டு இரங்காமலிருக்க முடியுமா? இதற்கும் இரங்காத கல்நெஞ்சன் என்று வைத்துக்கொள்வோம். அப்போது சக்தி தேவதை, “மகாத்மாஜீயின் ஆத்ம சக்தி சக்தியாக் கிரகத்தைக் கைகொள்ளுவர், இதற்கு மடங்காதவருமுண்டோ? தானாக மடங்கா விட்டாலும், ஊர் பழிச்சொல் மடக்கி விடுமல்லவா? ஆனால் இந்தத் தொல்லைகள் எல்லாம் நமது மௌன குருசாமிக்கு பத்தாவது உலகாதிசயமாகத்தான் இருக்கும் என்று திகைக்கலாம். ஆயினும் இது உண்மை என்னமோ உண்மைதான்.

மௌனகுரு என்று பெயர்வைத்த அவனுடைய பாட்டியின் வாயிக்கு எத்தனை வீசை சர்க்கரை கொட்டினாலும் தகும். (மௌனு சர்க்கரை ரேஷன் இல்லாத காலத்தில் பிறந்தவன்) பிறந்த இதுவரைக்கும் அவன், தன்பேருக்குப் பழுதில்லாதபடி எறக்குறைய மௌனசாமியார்தான். பேசவேண்டி நேரிட்டால் பேச்சுக்குப் பேச்சு, வரர்த்தைக்கு வார்த்தை, சுறுங்கக்கூறி விளங்க வைக்கும் முறையில்தான் பதில்வரும்.

பள்ளிக்கூடத்திலும் இப்படித்தான், வீட்டிலுக் இப்படித்தான் வெளியிலும் இப்படித்தான், பள்ளிக்கூடத்தில் பாடம் நடக்கையில் சகல மாணவர்கள் தங்களுக்குள் ‘கசமுசவென பேசிக்கொண்டால், உபாத்தியாயருக்கு முன்னதாக மௌனசாமிக்குத்தான் கோபம் பொத்துக்கொண்டுவரும்,

இவனைநேயர்கள் ‘சந்திரலோகவாசி’ என்றும், மேதாவி என்றும் சொல்லிப் பெயரிட்டுஅழைப்பர். மேதாவி என்பது இங்கு பேரறிவாளி என்ற பொருளில் கையாளப்படுவதாகத் தவறாக எண்ணலாம். மாணவர்களின் பரிபாஷை அகராதிப்படி மேதாவி என்றால் ஆகாசக்கோட்டை கட்டுபவன்—கிறுக்கன் என்றே பொருள். இந்த பரிபாஷை அர்த்தம் மௌனசாமிக்கும் தெரியாமலில்லை. தெரிந்தும் இவற்றை ‘சர்’ பட்டம்போல் பெருமையுடனும் பொறுமையுடனும் ஏற்றுக் கொள்ளுவான்.

மேதாவிகளின் சரிதங்களை ஓயாது படிப்பான். படித்ததுபோல் நடிக்கப் பழகுவான், எங்காவது ஒதுக்கான ரோட்டில்போய் ஆடுமாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு இவன் சொல்வது தமாஷாக இருக்கும். நாளுக்கு நாள் நெருங்கி தங்கள் கைவரிசைகளையும் காட்ட முற்பட்டனர். மௌனு ஆழ்ந்து படித்துக்கொண்டிருக்கும்போது, நரி ஊளையிடும் காட்டுப்பூனை கத்தும் கோட்டான் அலறும். இவைகள்எல்லாம் சிறுவர்களின் நாடகம்தான். இதைக் கண்டு மௌனுக்கு கோபமும் ஆத்திரமும் கிளம்பும். விளையாட்டுச்சிறுவர் களுக்குச் சொல்லவேண்டுமா? பதிலுக்கு மலைப்பிஞ்சுகளை, மௌனுவின் மேல் அர்ச்சனை செல்வார்கள்.

இப்பேர்ப்பட்ட கதாநாயகனுக்குக் கல்யாணவயதும் வந்தது. புத்தர் உலகத்தைத் தவிர்த்து மற்ற உலகமே இவன் அகக்கண்களுக்குத் தென்பட்டதாகக் காணோம். கல்யாணம் செய்தால் இந்த கிறுக்குநீங்கும் என்று பாட்டியார் பார்லிமெண்டில் யோசனை கூறப்பட்டது. மௌனுவின் தாயாரும் கல்யாண விஷயத்தை அவனிடம் பிரஸ்தாபித்தார். அவனோ இதைக்கேட்டதும் தேள் கடியுண்டவன்போல் பதறி பெண்களின் மாயையைக் குறித்தும் போக்கைப்பற்றியும் பட்டிணத்தார் திருவருட்பா முதலிய நூல்களிலிருந்து பாடல்களை சரமாரியாக ஒப்புவிப்பான். புத்தக வீம்பு இயற்கை எழுச்சியின் வீம்பைத் தட்டிக்கழிக்க முடியுமா? வயதின் கூற்றால் இவனும் ஒருவனாகக் கல்யாணத்திற்குச் சம்மதித்தான். ஆனால் கண்டிப்பான ஒரு நிபந்தனையின்மீதே அதாவது தான் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் எதிர்பேசாதவளாக இருக்கவேண்டும் என்பதே. இப்படியும்ஒருபெண் இருக்க முடியுமா? இந்த நிபந்தனையைக்கண்டு தாய் மனமுடைந்தாள். ஆயினும்பெற்ற பாசம்விடுமா? எங்கெங்கோ தேடியலைந்து கடைசியில் தன்மகனின் மனதிற்கேற்ற மனையாட்டியைக் கண்டுபிடித்து கல்யாணமும் செய்துவைத்தே விட்டாள்.

புதுமணப்பெண் என்ற நிலைமையில் மாத்திரமன்றி கல்யாணமாகி பல வருஷங்களான பின்னரும் மௌனுவின் மனைவின் தன்கணவனுடன் எதிர்பேசியறியாள், கணவனும் தனக்கு இன்னது

5-ம் பக்கம் பார்க்க

சென்றவாரத் தொடர்ச்சி

# முதலாவது ஹிந்தி மொழிப்போர்.

B. கணேசன்
B. A. (Honrs.)

செந்தமிழ்நாட்டில் இந்தியை கட்டாய மாக்கத் துணிந்த ஆரிய மந்திரிசபை நீண்டநாள் நிலைக்கவில்லை ஆட்சியில், தமிழ் வாழ்வைக் கெடுக்கத் துணிந்த, நூற்றுக் கணக்கான தன்னுணர்வுத் தமிழரை சிறையில் தள்ளி வாட்டிய, தென்னாட்டின் தனிப்பெருந் தலைவரை கோடை வெப்பத்திலும், பெல்லாரி சிறைக்கோட்டத்தில் வைத்துவருத்திய வஞ்சக ஆட்சி முடிவடைந்ததுகண்ட தமிழர் நாடெங்கணும், 'விடுதலை நாள்' கொண்டாடினர். தலைக்குவந்த ஆபத்து தலைப்பாகையோடு சென்றதென தமிழ் நாட்டார் பெருமூச்சுவிட்டுப் பெருமி தங்கொண்டனர்.

காங்கிரஸ் மந்திரி சபை புகுத்திய கட்டாய இந்திக்கு பெருத்த எதிர்ப் பிருந்ததைத் தெளிவாக உணர்ந்தது அடுத்துவந்த அட்வைசர் ஆட்சி. கட்டாய இந்தி சட்டத்தை நிபந்தனை இன்றி ரத்து செய்தது. இந்தோ-ஆரிய மனப்பான்மையைக்காட்டிலும் ஐரோப் பிய-ஆரிய மனப்பான்மை ஓரளவு ஜன நாயகத்துக்கும் மனிதத் தன்மைக்கும் கட்டுப்பட்டதென்பதை நிரூபித்தது அட்வைசர் சர்க்கார்.

உலக வரலாற்றிலேயே மொழிப் போராட்டம் நடந்தது இந்நாட்டில் தான். ஒரு மொழி பிறிதொரு மொழியை விழுங்க, சிதைக்க, மறைக்க பல் வகைகளிலும் ஆங்காங்கு இயற்கை முறையிலும், செயற்கை முறையிலும் நடந்து வருகின்றன. ஆனால் அப்படி மொழியைக் கெடுக்க முனைந்தோரின், வஞ்சகத்தை உணர்ந்து, போராட்டம் துவங்கி, இறுதியில் தன் மொழிக்குக் கேடுவராமல், அதன் மூலம்தன் தேசத் துக்கு தாழ்வு நேரிடாமல் ஆவன செய்ததோடன்றி இராணுவமமைத்துக் கொண்டது தமிழ் நாடன்றி வேறெது வுமில்லை, தமிழ் நாட்டவரின் இவ் வெற்றிக்கு உறுதுணையோடன்றி மூல காரணமாயுமிருந்தவர் பெரியார் இராமசாமியாவர். தமிழ்ப் பூங்காவில் ஆரிய நச்சுப் பூச்சி புகாவண்ணம் தடுத் தது, தமிழன் வாழ்வில் மணம் வீசச் செய்த பெரியார் உலக மொழி வர லாற்றிலேயே ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்திவிட்டார்,

"தமிழ் நாடு தமிழருக்கே" என்ற கோரிக்கை இந்தி எதிர்ப்புப் போராட் டம் ஈன்றெடுத்த குழவி. கடற்கரை கண்டனக் கூட்டத்தின் எதிரொலி. தமிழர் ஆவேசத்தின் உச்ச நிலையைக் காட்டும் சுதந்திர கோரிக்கையின் சின்னம். தமிழ் நாட்டார் விழித் தெழுந்தார்; உணர்வு கொண்டார்; உறங்கமாட்டார் என்பதற்கோரறிகுறி. மொழிப்போர் உரிமைப்போராக மாறிய தற்கமைந்த எடுத்துக்காட்டு.

தாலமுத்து - நடராசன் ஆகிய இரு தமிழ்ச் சேய்களைக் அளித்ததோடு, ஆயிரத்துக்கதிகமான தமிழ்ப் பெருமக் களை சிறைகொண்டதோடு, பெரி யாரைச் சிலகாலம் போட்டு வாட்டிய தோடு இந்திப் பீடை நாட்டைவிட்டக லுவதாயிற்று. இந்தியெதிர்ப்பு மேடை கள் நாட்டுப் பிரிவினை கோரிக்கை மேடைகளாகமாறின. மொழி மீட்சிக்கு ஒரு தாலமுத்து, ஒரு நடராசன் ஈந் தோம். நாடு மீட்சிக்கு ஆயிரமாயிரம் நடராசர்களையும். தாலமுத்துக்களையும் ஈய ஆயத்தமாயுள்ளோமென, தமிழர் ஆரவாரித்தனர்; ஆர்ப்பரித்தனர். "எங்கள் தலைவர் பெரியாரவர்களே! எங்கள் நாட்டை மீட்டுக் கொடுத்து சுதந்திரத் தமிழ்க்குடியரசு வரலாற்றில் நீங்காஇடம் பெறுங்கள். எங்களை உலகம் மதிக்கும் மக்களாக்குங்கள்" என்று பெரியார் வழி நின்று வேண்டிக் கொண்டனர். மொழியார்வம் முளைத் தெழுந்தஇடத்தில், உரிமையரசு பெறு மார்வம் முளைப்பதில் வியப்பில்லை.

சென்னை மாகாண பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களுக்கு அரசியலில், அதிகாரத்தில், உத்தியோகத்தில், பட்டம் பதவிகளில் நீதி வழங்கவேண்டு மெனக் கோரியெழுந்த நீதிக் கட்சியின் போக்கிலும், வேலைத் திட்டத்திலும், கொள்கையிலும, கோட்பாட்டிலும் புது முறுக்கேற்பட்டது பெரியாரின் தலைமையின் கீழ் என்று ஆரம்பத்தி லேயேகுறிப்பிட்டோம். ஆம்; எதிரிகள் கூற்றுப்படி "வெறும் பதவி வேண்டும் கட்சியாக" இருந்த ஒரு ஸ்தாபனம் மக்கள் சமுதாயத்துக்கு எல்லாத்துறை களிலும் விடுதலை வேண்டுமென்ற வேலைத் திட்டத்தைக் கைக்கொண்டு, மாபெரும் மொழிப்போரே நடத்தி, வெற்றியும் பெற்று இறுதியில் சுதந்திர சுயேட்சைத் தனியரசு ஸ்தாபிக்கவும் போரட்டம் நடத்த முனையுமானல் அதன் போக்கைப் புது முறுக்கென் ஞது வேறென்ன பெயரிட்டழைப்பது? வேண்டுமானுல் தலைகீழ்மாறுதலுற்ற தென்று கூறலாம்.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் பெரியா ருடன் ஒத்துழைத்த தமிழன்பர்கள் சிலர் நாட்டுப் பிரிவினைத் திட்டம் வந்துற்ற வேளையில் கட்சியைக் கைவிட்டு வெளியேறலாயினர்- அத்த கைய அன்பர்களை நம்பி பெரியார் போராட்டத்தைத் துவக்கியதுமில்லை; திட்டத்தை வகுத்ததுமில்லை. எனவே, அவர்கள் வெளியேறியதால் பெரியா ரும் மனஞ்சளைத்தாரில்லை; கட்சியின் கொள்கையோ, திட்டமோ பாதிக்கப்ப டவுமில்லை. ஒன்று சொல்லலாம்; கூட் சிக்காளான்கள் களையப்பட்டன; கரை யான்கள் கரைந்தன.

# செய்தியும் சிந்தனையும்!

## தங்கம் தண்ணீர் பட்டபாடு

இந்தியத்துணை முதலமைச்சர் சர் தார் பட்டேல் கடந்த வாரம் பம் பாய்க்கு வந்தபோது, அவருக்குத் தங் கத்தாலான அசோகர் ஸ்தூபி ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. இதன் எடை 731 தோலா. விலை மதிப்பு சுமார் ஒரு லட்சம் ரூபாய்.

• • • • •

காங்கிரஸ் தலைவர்களும், பிரசாரகர் களும், பொதுத்தேர்தலின் போது தங் களை சட்டசபைக்கு அனுப்பிவைத்தால் ஆட்சிபீடத்தில் ஏற்றுவித்தால் நாட் டிலே பாலும் தேனும் ஓடச்செய்வதாக வாக்களித்தார்களல்லவா? சொன்னுல் சொன்னபடிதான் நடக்கிறது.

இப்போது தங்கம் தண்ணீர் பட்ட பாடாய் ஓடுகிறது? யாரைத்தேடி? எங்கே? ஏழை மக்களிடமா என்று சிலர் அசட்டுத்தனமாய் கேட்கலாம். மக்களிடமிருந்தால் என்ன, பொது ஜனப்பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஆளும் மந்திரிகளிடமோ, காங்கிரஸ் தலைவர் உடையிலோ இருந் தால் தானென்ன? எல்லாம் ஒன்று தானே?

## காந்தி மருள் பிடித்த பான்சாலி

காங்கிரஸ் ஊழியர்களில் சிலர் தம் மிடம் தவருன செய்தியைத் தெரிவித் ததால், பேராசிரியர் பான்சாலி உண்ணுவிரதம் மேற்கொண்டார். நால் வரைக் கொண்ட காங்கிரஸ் தூதுக் குழு, பேராசிரியர் பான்சாலி தங்கி யிருக்கும், கட்காவ் (மத்திய மாகாணம்) கிராமத்திற்குச் சென்று அவரைக் கேட்டுக்கொண்டதால் உண்ணுவிரதத் தைக் கைவிட்டார்.

• • • • •

பேராசிரியர் பான்சாலி உபாத்தியா யரல்லவா? சின்னஞ்சிறு செல்லக்குழந் தைபோல் எடுத்ததற்கெல்லாம் இவர் உண்ணு விரதமிருப்பது பள்ளிக்கூட "சாகவாச தோஷம்" போலும் பிடிவா தம் குழந்தைகளுக்கு அதிகம் ஆனுல். இவ்விதம் செய்து இவர் இந்த உண்ணு விரதத்திற்கு மதிப்புத் தேடுகிருரா அல்லது மதிப்பைக் கெடுக்கிருரா என்றும் கவலைகொள்ளச் செய்கிறது. ஒரு சமயம், பாமரமக்கள் சிலருக்கு "சாமிமருள்" பிடித்துக் கொள்வது போல் இவரை "உண்ணுவிரத காந்தி" மருள் அடிக்கடி பிடித்துக் கொள்கிறது போலும்.

## அடிமைத்தனத்தின் சின்னம்?

'ஆங்கில வுடையான 'கோட், சூட்' அணிவது அடிமைத்தனத்தின் சின்ன மாகும். மந்திரி பதவிக்கு ஆசைப்படும் எமது நண்பர் திரு சுந்தரராவ் நாயுடு காரு இந்த வுடைகளைவிட்டு விட வேண்டும். சர்க்கார் சேவகர்கள் அணி யும் வுடைகள் நவாப்கால வுடைகள் போல் இருப்பதால் நண்பர் நாயுடு தமது கோட் சூட்டுகள் வீணுகி விடுமோ என்று கவலைப்படத் தேவை யில்லை. அந்தவுடைகளை திரு நாயுடு தமது சேவகர்களுக்கும் மோட்டார் ஓட்டிகளுக்கும் தந்து விடலாம்" என்று உபதேசித்தார் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, தமக்கு ராஜாஜி மண்டபத்தில் அளிக்கப்பட்ட விருந்தின்போது.

• • • • •

வடநாட்டாரணியும் மோஸ்தரில் காந்தி குல்லாவும் ஜுப்பாவும் பைஜா மாவும், அணியும் தென்னுட்டுக் காங் கிரஸ் "சுதந்திர தியாகிகள்" என்ன நினைத்துக் கொள்கிருர்களோ?

"ஆங்கில வுடையணிந்தால் எஜ மானர் திரு சுந்தரராவ் நாயுடுகாரின் உடலில் ஒட்டும் "அடிமைத்தனம்" எங்கள் உடலில் ஒட்டாதா?" என்று அவருடைய சேவகர்களும் டிரைவரும் கேட்பதாக வதந்தி.

## டாக்டர் பட்டாபி "அச்சா மாலும்"

காங்கிரசின் புதுத் தலைவராக்கப் பட்ட டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, இந்துஸ்தானி பிரசார சபையாரளித்த உபசாரத்திற்குப் பதிலளிக்கையில், இந்துஸ்தானி பல மாகாணத் தொடர்பு மொழியாவது உறுதியென்றும் எனவே அனைவரும் இந்துஸ்தானியைக் கற் றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரி வித்துக் கொண்டார்.

• • • • •

டாக்டர் பட்டாபி, இந்துஸ்தானிக் காரரல்ல வாகையால் அவரை காங்கிர சின் தலைவராக்காதீர்களென்று வட நாட்டிலே பிரசாரம் செய்யப்பட்டது, உண்மை தெரியாத வீண் அவதூறு என்று நிரூபிக்கிருர் போலும், இப் போது இங்கு, தமது இந்துஸ்தானி "காதலை"த் தெரிவித்து.

## கிழட்டு மாமியார் உபசாரம்?

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் திரு தாண்டன், டாக்டர் பட்டாபி சீதா ராமய்யாவுக்கு வோட்டளித்தார் என்று அதிகார பூர்வமாகத் தெரிய வருகிறது. டாக்டர் பட்டாபியிடம் எந்தவித குரோதமும் கொள்ளவில்லை யாகையால்தான், தான் டாக்டர் பட்டாபிக்கு வோட்டளித்ததாக திரு தாண்டனே கூறுகிருர்.

• • • • •

மகனின் கோபத்திற்காளான கிழத் தாயார், மருமகளின் தலையை வாரிப் பின்னிவிட்டாளாம் என்று அம்மாமிகள் கூறும் கதைக்கும் இதற்கும் சம்பந்த முண்டா? அல்லது குப்புறவிழுந்தும் மீசையில் மண்ணெட்டவில்லை என்ற வீரப்பாராட்டுதலா?

——: (x) :——

டெலிபோன் : 86729.

## நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

தொடர் கதை

# லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

———: (o) :———

[முன்வாரத் தொடர்ச்சி]

[ "பிவியார்" ]

## (இரண்டாம் அத்தியாயம்)

தளர்ந்து ஊசலாடும் பூங்கொடி போன்று, கதவைத் துணையாகக்கொண்டு நின்று கொண்டிருந்தாள் காஷியர் காமாட்சியின் மனைவி தங்கம்மாள்: பேருக்கேற்றபடி அவள் அழகிலே மெருகிட்ட-தங்கச்சிலைதான். இளம் வாழை மரம்போன்று கொழு கொழுப்பான உடலமைப்பு. கனிவும் புன்சிரிப்பும் தவழும் கபடற்ற குழந்தைமுக பொலிவு, இயற்கையழகின் அணிவிளக்கு, அன்புகனிந்த பார்வை, அழகிய கைகளின் அழகுக்குப் பரிசாகச் சூட்டியதுபோன்ற, வைரம் பதித்த மெல்லிய பொன்வளையல்கள். அவளது திருமுகப்பொலிவைக்காணத் துணைபுரியும் சுடர் விளக்குகள்போல் ஒலிவீசும், வைரத் தோடுகள், லோலக்குகள் கழுத்திலே டாலர் வைத்த மெல்லிய பொன் சங்கிலி, வெண்சிகப்புப் பட்டுடை வெற்றிலைக்காவிபடிந்த, இவற்றை சிகப்புடன் கூடியவாய் சிரிக்கும் முத்துக் கோர்வை பற்கள் கருத்தைக் கவரும் உந்தக்கண்களின் கருவிழிகளை நிகர்த்த ஜவ்வாது சாந்துப் பொட்டு. அதற்குக் கீழ் சந்திரப்பிறை போன்ற குங்குமப் பொட்டு.

அந்த அலங்காரம், அந்த அழகு சிங்காரம், அவள் நின்றநிலை, காண்பவர் மனத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை அவளுக்குத்திருவடி தாசர்களாக்கும் அவ்வளவு கவர்ச்சி மிக்கதாகவிருந்தன.

இளமைப்பருவத்தின் பொலிவும் கவர்ச்சியும் அவளுடைய ஒவ்வொரு அங்கத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

சேற்றிலே கமலம் முளைத்து அழகு மகளிர் திருமுடி ஏறியது போலத்தான் அவளுடைய பிறப்பும் வளர்ப்பும் மணமும். தாய்தந்தையர் கிராமவாசிகள் எனவே இந்தத் தங்கம்மாள், தூய்மை சூழ்நிலைக்கொண்ட கிராமத்திலே, இயற்கை அழகுடன் அழகு மலராகவும் சுதந்திரத்துடனும், ஆயினும் பெண்மைக்குரிய அடக்க ஒடுக்கத்துடனும் வளர்ந்த இயற்கையின் அழகுச்செல்வம் கிராமவாசத்தாலும் பயிர்த் தொழில் உழைப்பிலும், உரிய உடல் வலிமை கொண்டதும் நாகரீக பட்டணவாச நலிவுகொண்ட வெறும் இளம் வாழைத் தண்டல்ல, செயற்கைப் பூச்சுகூட்டிய மேல்மினுக்கு அழகல்ல, இயற்கை வளம் மிக்க சுந்தர சுக உடலினள்.

"இந்த அழகுச்செல்வி கிராமத்தில் வாழப் பிறந்தவளா? ஏர் பிடிக்கும் முரட்டுக் கைகளில் கசக்கப்படும் மலர் அல்லவேஇது! அரண்மனையிலே ராணி போல இருக்கப் பிறந்தவளாச்சே இவள்" என்று அந்தக் கிராமத்து பாட்டிமார், கிணற்றடியிலும்-பயிர் நிலத்திலும், களத்திலும் கோயில் முற்றங்களிலும் சந்திக்கும்போதெல்லாம் பேசிப் பேசிப் பரவசப்படுவார்கள்.

ஆத்தா! பராசக்தி! இவள் அழகுக்குத் தகுந்த இராசன் வந்து வாய்க்க வேணும்" என்று பாட்டியம்மாள் அவ்வப்போது ஊர்தேவதைக்கு விழா நடக்கும்போதெல்லாம் பொங்கலிட்டு வேண்டிக்கொள்வாள்.

இந்த வேண்டுதல்தான் கைமேல் பலனளித்ததோ அல்லது தங்கம்மாளின் அதிஷ்ட ஜாதகத்தின் வாய்ப்போ, என்னமோ? அவள் அழகுக்கேற்ற அழகுபுருஷனுகக் காமாட்சிநாதன் வந்துவாய்த்தான்.

இவ்விருவரும் சந்தித்ததும் கல்யாணக் கதையும் ஒரு நல்லதிர்ஷ்ட வரலாறேயாகும் காமாட்சி நாதன் பட்டப் படிப்பை படித்துவிட்டு தாலூகா ஆபீசிலொரு குமஸ்தாவாகஅமர்ந்தார். சிறுவயசு தானென்றாலும் புதிய கூர்மையும், உழைப்பும் சுறுசுறுப்பும், தாசில் தாரய்யாவின் மனத்தைக் கவர்ந்தன. மேலதிகாரியின் "கருணு கடாட்சம்" விழுந்துவிட்டால் அப்புரம் சொல்ல வேண்டுமா?

தாசில்தாரய்யாவின் கருணைக்கண் இந்த காமாட்சிநாதன் மீது பாய்ந்ததற்கு மற்றொரு காரணமுண்டு. அவருக்கு குலம்விளக்க ஒரு குத்து விளக்கு போல் இருந்தது ஒரேஒரு பெண்தான் ஆண்மக்களும் கிடையாது. எனவே அந்த பெண்ணை சௌந்தரம்மாளை, ஆண்மகன்போல் நடத்தி எவ்வளவோ செல்வத்தோடு சுதந்தரத்தோடு வளர்த்தி படிக்கவைத்தார்.

காமாட்சி நாதன் குமஸ்தாவாக சேர்ந்தபோது, தாசில்தாரின் மகள் சௌந்தரம் பதினெட்டைக் கடந்தவயதினள். பருவமங்கை எனவே, மாப்பிள்ளைக்காக நல்ல இடங்களில் வலைபோட்டுத் தேடிக் கொண்டிருந்தனர்.

இல்விதம்தேடி கண்ணில் பட்ட மாப்பிள்ளைகளோ. உடலழகிருந்தால் படிப்பில்லை, படிப்பிருந்தால் குணமில்லை; குணமிருந்தால் அந்தஸ்துக்குத் தகுதியற்ற குடும்பம், இவ்வாருக பலப்பல தோஷக்காரர்களே இதுவரை தென்பட்டுவந்தனர். இதனுல் தாசில் தாரய்யா, தமது இல்லற தேவியின், அதட்டல்களாலும் பொறுமல்களாலும் கண்ணீராலும் பட்டஅவஸ்தை கொஞ்சநஞ்சமல்ல கிடந்த பட்டினி ஒருநாளல்ல இரண்டு நாளல்ல, பேசாமை நாடகங்களும் தீண்டாமை அண்டாடைபராமைக் காட்சிகளும் நடப்பதுண்டு. எத்தனையோ தடவை தாசில்தாருக்கு பட்டினி வயிறும், வெளித்திண்ணை சயனமும் கிடைத்து வந்திருக்கிறது.

சேவகர்களும் அண்டை அயலார்களும் இந்த நாடகங்களைப்பற்றி ஓயாது அரட்டைக்கச்சேரிகள் நடத்தி சிரித்து மகிழ்வர்.

இவைகளெல்லாம் தாசில்தாரய்யாவின் காதுக்கும் கண்களுக்கும் எட்டாமலாபோகும். எட்டியதுடன் போனுல் தேவலையே சிலர் ஜாடைமாடையாகக் கிண்டல் செய்யவுமாயினர். இவற்றைக் கேட்டும் கண்டும் ஒரு தாசில்தாரய்யாவின் மனம்என்னபாடுபட்டிருக்கும்?

இரண்டாண்டுகளாக தாசில்தாரய்யா கொதிக்கும் பாலைவனத்திலே பிரயாணம்செய்பவரைப்போல்தான் தவித்துக்கொண்டிருந்தார்.

இந்தச்சமயத்தில்தான், பாலைவனத்தில் தென்பட்ட நீரூட்டுச் சிறுகோலை போல் காமாட்சி நாதன் வந்து சேர்ந்தான்.

காமாட்சிநாதன் வேலைக்கு வந்து சேர்ந்த மறுநாளே, ஏனே தாசில்தாரின் கண்ணும் கவனமும் அவன் மீது பாய்ந்து ஆராய்ச்சி செய்யத்தொடங்கின ஒருவாருக ஆராய்ச்சிச் சோதனைகளுக்கு பின்னர் அய்யாவிற்கு ஒருவாருகத் திருப்தி உண்டாயிற்று.

ஆனல் இந்த விஷயத்தில் அவரல்லவே, முடிவு செய்யும் கர்த்தர். சர்வாதிகாரமும் ஆத்துக்காரியம்மாவின் கைக்குள்ளல்லவா அடக்கம்? ஆகவே சாட்சாத்" மனையாட்டி தேவியின் பார்வைக்கும் இந்தக் காமாட்சிநாதனை அனுப்பிவைக்கத் தொடங்கினர்.

காமாட்சிநாதன் முதல் நாள் தாசில் தாரய்யாவின்வீட்டிற்குச்சென்றபோது முதலில், காட்சியளித்தது இரட்டை நாடிப் பெண்மணி ஒருவள், தாசில்தாருடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இந்த விநாயகன் குஞ்சு அவருடைய மகளாக இருக்கமுடியுமாவென்றே அவனுக்கு முதலில் சந்தேகமுதித்தது. தனித்து, ஒரு பெண், அதுவும் குமரி நின்று கொண்டிருந்ததால் அவனும் உள்ளே போகத் துணிவுகொள்ளாது வாசலில் சற்றுத் தயங்கித் தயங்கி நின்றான். அதுவும் பட்டும் வயிரமும் சுமந்து நிற்பவர்களைக் கண்டால் யாருக்கும் கொஞ்சம் மரியாதையும், முதலில் பேச்சுக் கொடுக்கத் தயக்கமு மேற்படுவது பணமிதத்தின் பெருமைச் சிறப்பல்லவா?

இந்த தயக்கத்தைத் தடுமாற்றத்தைக்கலைக்க அந்தப்பெண்ணே முன்னுற்ருள். பணித்ததற்குறிய அதிகாரதோரணையால், கொஞ்சமும் தயக்கமும் காட்டாது. யார் நீ என்று அதிகார அதட்டல் குரலிலும் கேட்டாள். அதுவும் அலட்சயமும் கொஞ்சம் வெறுப்பும் சீற்றமும் காட்டும் பாவனையில்,

குமரனே, தட்டித் தயங்கி அடக்கவொடுக்கத்துடன், வார்த்தைகள் தடுமாற உடல்வியர்க்க தட்டித் தயங்கிதான் தாலூகாபீஸ் குமஸ்தா வென்றும் தாசில்தாரய்யா, வீட்டில் சில காகிதக் கட்டுகளைவைத்துவிட்டு வந்துவிட்டதால் அவற்றை எடுத்து வரும்படி தன்னை அனுப்பியதாகவும் தெரிவித்தான். (தொடரும்.)

# நகைச்சுவையும் மனமலர்ச்சியும்

ர. வி.

### அழுதபிள்ளைக்குப் பால்கிடைக்குமா?

பெரியவர்:—(பால்கடைக்குப் பக்கத்தில் நின்று அழுது கொண்டிருக்கும் பையனைப் பார்த்து) ஏன் குழந்தாய் அழுகிருய்?

குழந்தை:—பால் வேண்டும்.

பெரியவர்:—பால் வேண்டும் என்ருல் பால் கடைக்குப்பக்கத்தில் நின்று அழுதால் வந்துவிடுமா? பால்

சிறுவன்:—பின்னே, எங்க வாத்தியார்தான், சொன்னரே அழுத பிள்ளைக்குப் பால் கிடைக்கு மென்று! அனுல்தான் பால் கடைக்குப்பக்கத்தில் நின்று அழுதேன்.

### படிப்பு யாருக்கு?

கிழவனர்:—தம்பி! என்னஉத்தியோகம் செய்து கொண்டிருக்கிருய்?

வாலிபன்:-டாக்டருக்காகப் படித்துக் கொண்டிருக்கிறேன்.

கிழவன்:—டாக்டருக்காக நீ யேன் படிக்கவேண்டும்? அவருக்கு படிக்கத் தெரியாதா; என்ன?

### டாக்டரின் சமர்த்து?

ஒருவர்:—எங்கள் குடும்ப டாக்டர் சொன்னது சொன்னபடி செய்துவிடுவார் பாருங்களேன். போன மாதம் எனக்கு நிமோனியா காய்ச்சல் படுத்த படுக்கையாகிவிட்டேன் "உன்னை ஒரு மாதத்தில் நடக்கவைக்கா விட்டால் என் டாக்டர் தொழிலையே விட்டு விடுகிறேன்" என்று டாக்டர் சொன்னர் அப்போது.

நன்பர்:—சொன்னபடி செய்துவிட்டாரா?

முதல்:—தடையில்லாமல் டாக்டருக்குக்கொடுக்கவேண்டிய பணத்துக்காக என் மோட்டாரையே விற்றுவிட்டேன், இப்பொழுது நான் காலால்தான் நடந்து ஆபீசுக்குப் போய்வருகிறேன்.

### வாலில் பல் உண்டா?

தாய்:—நாயின் வாலைப்பிடித்து இழுகாதே கடித்துவிடும்.

குழந்தை:—நாயின் வாலில் ஏதம்மா பல்-கடிக்க?

### எதற்குச் சிகிட்சை?

கடை முதலாலி:—(போனில்) டாக்டர்! டாக்டர்!! கொஞ்சம் உடனே நம்ம கடைக்கு வாருங்கள் வாடிக்கைக் காரர் நம்ம கடையில் மூர்ச்சையாகி விழுந்துவிட்டார். நம்மபேர் கெட்டுவிடும் போலிருக்கே!

டாக்டர்:—கெட்டபேருக்கு சிகிட்சை செய்ய, நமக்குத்தெரியாது சார்!

### கருத்து வேற்றுமை

நியாயாதிபதி:—என்ன அம்மா? தங்கள் புகார் என்ன?

சினிமா நடிகை:—இந்த கான்ஸ்டபிள் பட்டப்பகலில் நூற்றுக் கணக்காணவர் நடமாடும் கடை வீதி நாற்சந்தியில் என்காரை நிறுத்தி, என்னைப் பார்த்து 40-45 இருக்கும் போலிருக்கே என்று கேட்டு, என் மானத்தை, என் செல்வாக்கை என் மதிப்பை கெடுத்து விட்டார்.

மாஜீ—அதனுல் எப்படி உம்மதிப்பும் செல்வாக்கும் குறைகிறது?

நடிகை:—திரையில் பார்த்தவர்கள் என்னை 16, 20 வயது நங்கை என்றே சொல்லுகிருர்கள். இப்போது 40, 45 வயதுகிழவி என்பதைக்கேட்டால் இனிமேல் என்னை மதிப்பார்களா?

கான்ஸ்டபிள்:—நான் வயதைச்சொல்லவில்லையே, காரின் வேகத்தைத்தானே குறிப்பிட்டேன்.

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVI AR.